804

804

# பொன்னூற்றுப் புரவலன்

அல்லது

## அன்பின் ஆற்றல்

SCANNED

31 JAN 1935

SCANNED

இ. ம. திலகவதியார்

எழுதியது.

[illegible]ரியாண்டிப் பிள்ளை கம்பெனி

சென்னை

TB
O-,3(6)
N34

84484

# பொன்னூற்றுப் புரவலன்

அல்லது

## அன்பின் ஆற்றல்

வகுப்பு 6

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 JAN 1935
MADRAS

இ. ம. திலகவதியார்
எழுதியது.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,
சென்னை

பதிப்புரிமை.]

[விலை அணா 6

# முகவுரை

சிறுவர் சிறுமியர் ஓதிப் பயன் பெறக் கூடிய சிறு சிறு கதைகள் பல ஆங்கில மொழியில் மலிந்து கிடக்கின்றன. அவற்றுள், புலமை நிரம்பிய ஆசிரியர் ஒருவர் ஆக்கிய சிறு நூலொன்றைத் தழுவி நமது தமிழகத்துப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்றவாறு இச்சிறு கதை தமிழ் மொழியில் எளிய நடையில் எழுதப் பெற்றுளது.

இதில் பல நீதிகள் அடங்கியிருக்கின்றன. இதை ஓதும் சிறுவர் சிறுமியர் இள்வயதிலேயே பரோபகாரம், ஜீவகாருண்யம் முதலிய நற்குணங்கள் பொருந்தப் பெற்று, நமது தமிழ் நாட்டுக்குத் திலகங்களென மிளிர்ந்து, வாழ்க்கை நலனைப் பெரிதும் துய்ப்பர் என்பது திண்ணம்.

ஆதலால், நமது தாயகத்து மாணவ மாணவிகள் இச்சிறு கதையை வாசித்து நன்மை பெறத் தென்னிந்திய கல்வி இலாகா அதிகாரிகள் தங்கள் ஆதீனத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இதை உப பாடமாக வைத்து, இதைப் போன்ற சிறு சிறு கதைகள் எழுத எனக்கு ஊக்கம் அளிப்பார்களாக.

சென்னைப்பட்டினம்,
1934ளு டிசம்பர்மீ 1உ

இ. ம. திலகவதி

# பொருளடக்கம்


| பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பொற்களக் குரிசில் | ... ... | 3 |
| 2. | பஞ்சத்தின் கொடுமை | ... ... | 11 |
| 3. | விருத்தாப்பிய விருந்தாளி | ... ... | 19 |
| 4. | கன்மனக் கயவர் | ... ... | 25 |
| 5. | நடு நிசிக் காட்சி | ... ... | 31 |
| 6. | பொற்கூஜாவின் பூர்விகம் | ... ... | 38 |
| 7. | களவாடிய புண்ணிய தீர்த்தம் | ... | 55 |
| 8. | கன்னெஞ்சமுடையவன் கதி | ... ... | 65 |
| 9. | வறுமை ஒழிந்தது. | ... ... | 69 |

# பொன்னுற்றுப் புரவலன்

அல்லது

## அன்பின் ஆற்றல்

---

### அத்தியாயம்—1

### 'பொற்களக் குரிசில்'

நெடுங்காலத்திற்கு முன், மத்திய இந்தியாவில் நித்தில புரம் என்னும் தேசம் ஒன்று இருந்தது. அத்தேசம் பல மலைகள் சூழ்ந்தது; மிருகங்கள் வசிக்கும் காடுகள் அடர்ந்தது; நீர் வளமும் நில வளமும் பொருந்தியது.

நித்தில புரத்திற்கு மத்தியில் அழகிய பள்ளத்தாக்கு ஒன்று உண்டு. அதற்குப் பொற்களம் என்று பெயர். அப்பெயருக்கு ஏற்ப, அங்கு நெல் முதலிய தானியங்கள் செழிப்புற்று விளைந்து, மிக்க பலனைக் கொடுத்தன. அதனால், அப்பள்ளத்தாக்கிலும் அதைச் சுற்றிலும் இருந்த கிராமங்களிலும் வாசஞ் செய்து வந்தவர்கள் யாதொரு கவலையும் இல்லாமல் ஜீவனம் செய்தார்கள். அவர்கள் பஞ்சம் என்பதை அறிந்ததே இல்லை.

பொற்களமும் அதைச் சேர்ந்த கிராமங்களும் விசுவநாதர் என்னும் ஒரு மிராசுதாருக்கு உரியவை.

அவர் தயாள குணமுள்ளவர்; சற்குண சீலர்; ஏழைகளைப் பரிபாலிப்பதிலும், சத்திரம் சாவடிகள் நிருமாணிப்பதிலும், கோயில் குளங்கள் அமைப்பதிலும் அவர் தமது காலத்தைக் கழித்து வந்தார்.

அவர் தம் கீழடங்கிய குடியானவர்களை வருத்தி அவர்களிடமிருந்து வரி தண்டினதேயில்லை. அவர்கள் ஏகோபித்து மன மகிழ்ச்சியுடன் கொடுப்பதைப் பெற்று அவர் திருப்தி அடைந்து வந்தார். அதனால், நாளுக்கு நாள் குடியானவர்களுக்குச் செல்வம் விருத்தி ஆகி வந்தது.

விசுவநாதர் இரு மனைவியரை மணந்தார். ஏனெனில், அவர் முதல் விவாகம் செய்துகொண்டு பல வருஷங்கள் சென்றும் அவருக்குப் புத்திரப்பேறு உண்டாகவில்லை. அது காரணம் பற்றி அவருடைய ஆப்த நண்பர் சிலர் அவருக்குப் பன்முறை புத்திரப் பேற்றின் சிறப்பை எடுத்துக் கூறி, இரண்டாம் விவாகம் செய்து வைத்தனர். பூர்வ புண்ணிய வசத்தாலும் கடவுள் கிருபையாலும் நண்பரின் ஆசீர்வாதத்தாலும் விசுவநாதருக்கு இளைய மனைவி வயிற்றில் இரு புதல்வர் பிறந்தனர். நான்கு வருஷங்களுக்குப் பிறகு, யாவரும் மலடி என இகழ்ந்து வந்த அவருடைய மூத்த மனைவியும் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள்.

விசுவநாதர் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார்; கடவுளைப் போற்றினர்; தம் புதல்வருக்கு முறையே சங்கரன், ஹரிஹரன், குமரநாதன் என

நாமகரணம் செய்து அவர்தமைப் பொன்னே போலப் போற்றி வளர்த்து வந்தார்.

அவருடைய இளைய மனைவி வயிற்றில் பிறந்த மூத்த குமாரர் இருவரும் செல்வச்செருக்கு உற்றனர்; கல்வியை வெறுத்தனர்; தம் மனம் போனவாறு நடக்கலாயினர்; தம் தாய் தந்தையரைக் கிஞ்சித்தும் மதிக்கவே இல்லை. அவர்களுக்குத் துஷ்டர் அனேகர் இஷ்டர் ஆயினர்.

ஆனால், குமர நாதன் ஒப்பு உயர்வு அற்ற உத்தமப் புதல்வனாக விளங்கினான்; கல்வி ஓதுவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தான்; தன் மாதா பிதாக்களின் மனங்கோணாமல் அவர்கள் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்து வந்தான். சுருங்கக் கூறின், சங்கரன் ஹரிஹரன் ஆகிய இருவரும் துன்மார்க்கராயினர்; குமர நாதனோவெனில், சன்மார்க்கன் எனப் பலரும் புகழ விளங்கினான்.

* * *

விசுவ நாதர் தம் மூத்த புதல்வரின் துர்க்கிருத்தியங்களைப் பொறுக்கக் கூடாமல், பிணி வாய்ப்பட்டு இறந்து போனார். அவர் கால கதி அடைந்த வருத்தத்தால், அவருடைய இரு மனைவியரும், தத்தம் மைந்தரைத் தனியே விடுத்து உயிர் துறந்தனர்.

தம் தாய் தந்தையர் இறந்து போனதும் சங்கரனும், ஹரிஹரனும் மட்டில்லாத மகிழ்ச்சியடைந்தனர். ஏனெனில், இனிமேல் அவர்கள் இஷ்டம் போல நடப்பதைத் தடுப்பவர் எவரும் இலர். குமர நாதன் அவர்-

களைப் போலல்லாமல், மனங் கசிந்து வருந்தினன்: "ஐயோ! இப்பூவுலகில் நான் என் அருமையான தாய் தந்தையரை இழந்து திக்கற்று அலைய நேர்ந்ததே! கடவுள் என்மீது கருணைவைக்காமற் போனதென்ன! இவ்விளவயதில் எனக்குப் புத்தி மதி சொல்லி என்னை நல்ல வழியில் நடத்துபவர் எவர் உளர்!" என்று ஏக்கமுற்றான்.

*　　*　　*

சங்கரனும் ஹரிஹரனும் ஒன்று சேர்ந்து-கொண்டு, தம் மாற்றாந்தாய் வயிற்றில் பிறந்த குமர நாதனைக் கொடூரமாய் நடத்தலாயினர். விசுவ நாதருக்குச் சொந்தமான கிராமங்கள் அனைத்தையும் அவ்விரு துஷ்டரும் கைப்பற்றி, அதுகாறும் யாதொரு கவலையும் இல்லாதிருந்த கிராம வாசிகளை மிகவும் வருத்தி-னர். அதனால், அந்த ஏழைக்குடியானவர் நாள்தோறும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் இருந்தனர்; பேராசை மிகுதியால் தமது மன அமைதியைக் குலைத்த அவ்விருவரையும் வயிற்று எரிச்சல் கொண்டு வைதனர். சிலர் துன்பம் பொறுக்கமாட்டாமல் ஊரை விட்டு ஓடினர். பிச்சைக்காரரும் அவர்களுடைய வீட்டை நாடிப் போவதில்லை. அவர்கள் சுபாவத்தை அறியாத அந்நிய நாட்டார், அவர்களுடைய செல்வப் பெருக்கால் மதி மயங்கி, அவர்களிடம் பரிசில்பெற விரும்பி அவர்களை அணுகினால், அவ்விருவரும் அவ்வந்நியரை நையப் புடைத்து, நாட்டுக்கு அப்பால் அனுப்புவர். கிளி முதலிய பறவைகளும், அணில் முதலிய பிராணிகளும் அவர்களுடைய கண்-

ணில் பட்டால், இறந்து ஒழிவது நிச்சயம். ஏனெனில், அவைகள் அவர்களுடைய தோட்டங்களில் விளையும் கனி வர்க்கங்களைக் கடித்துத் தின்று, அவர்களைப் பெருநஷ்டத்திற்கு உட்படுத்தும் என்று அவர்கள் எண்ணினார்கள்.

இத்தகைய உலோபியர் இருவருக்கும் நாளடைவில் அபரிமிதமான பொருள் குவிந்தது. சுய நலமும், ஈரம் இல்லாத நெஞ்சமும், பொருள் சேமித்து வைக்க வேண்டும் என்னும் ஆர்வமும் ஒருங்கே அமைந்திருந்த அவர்களுக்குப் பொருள் சேராமல் போகுமா? அவர்கள் குபேர சம்பத்து உடையவர்களாய் இருந்தும், அவ்வூரார் அனைவரும் அவர்களைக் ' கன்மனக் கயவர்! ' என இகழ்ந்து உரையாடினர்.

குமர நாதன் எவ்விஷயத்திலும் அவர்களுடன் கலப்பதில்லை. அவர்களுடைய நடவடிக்கைகளை அவன் அறவே வெறுத்தான். அவன், அவர்கள் அடித்துத் துரத்தும் பஞ்சை பனுதிகளை அவர்களுக்குத் தெரியாமல் அழைத்துக்கொண்டு போய், இன்சொல் கூறி, அன்னம் அளித்து அனுப்புவான். அவன் தன் தந்தையார் விசுவநாதரைப் போல ஏழைக் குடிகளுக்குத் தன்னால் இயன்ற உதவி செய்து வந்தான். அவன் அநேக முறை தன் அண்ணன்மாருக்குப் புத்தி சொல்லப் போய், அடியுண்டு அவஸ்தைப்பட்டான். அவன் அடிக்குஅஞ்சவில்லை; அவர்கள் மனந்திருந்தி நன்னடக்கை உடையவர்கள் ஆக வேண்டும் என்பதே அவனுடையமுக்கிய நோக்கம். ஆதலால், அவர்களுக்கு அடிக்கடி அறத்தின் சிறப்பை இடித்து உரைப்பான்; நீதி

மொழிகளால் அவர்கள் மனத்தைக் கரைப்பான். ஆயி-னும், அவர்கள் திருந்துவதாக இல்லை. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்,' என்னும் பழமொழி வீண் மொழி அல்லவே!

அச்சிறுவனது மனத் தூய்மையையும், தாழ்மை-யையும், கல்வி வன்மையையும், வள்ளன்மையையும் கூர்ந்து கவனித்து வந்த கிராம வாசிகள், அவனைப் 'பொற்களக் குரிசில்' என்று போற்றிப் புகழலா-னார்கள்.

சங்கரனும் ஹரிஹரனும், குமரநாதனைப் பொருட்-படுத்தாமல், அவன் மீது பொறாமை கொண்டு, முன்-னிலும் அதிகமாகத் துன்புறுத்தினர்; அவன் இறந்து-விடின் நலம் என்றும் கருதினர். அவர்களுடைய வன்-னெஞ்சம் இருந்தவாறு என்னே!

குமர நாதன் அவர்களுக்கு அடங்கி ஒடுங்கி நடந்து வந்தான்; அவர்கள் வார்த்தைக்குக் குறுக்கே பேசுவது இல்லை. அவர்கள் தனக்கு இடும் கட்டளை-களைத் தன்னால் இயன்றவரையில் சரிவரச் செய்து முடிப்பான். சகோதர வாஞ்சை அவனுக்கு அதிகமாக இருந்ததால், அவர்கள் தனக்குச் செய்து வந்த இடை-யூறுகளை நன்மையாகக் கருதினான். 'நம்மால் ஆவது ஒன்றும் இல்லை. யாவும் ஈசன் செயல்,' என்று அவன் அடிக்கடி சொல்லிக்கொள்வது வழக்கம்.

சங்கரனும் அவனுக்கு நேர் இளையவனாகிய ஹரி-ஹரனும் தங்கள் வீட்டில் தங்கியிருப்பதே இல்லை. இரவிலும் சாப்பாட்டு வேளையிலும் அவர்களை வீட்டில்

காணலாம். குமர நாதனே, எங்கும் வெளியில் போவதற்கு இல்லாமல், வீட்டுக் காவலாளியைப் போல இருந்து, அவ்விருவருக்கும் உரிய பணிவிடைகளைச் செய்து வந்தான்.

அவ்விருவரும் துஷ்டர் ஆனதால், அவரிடம் வேலைக்காரர் எவரும் வேலையில் அமரவே இல்லை. அது காரணம் பற்றி, குமர நாதனே சமையல் வேலையையும் செய்து வந்தான். அவன் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, ஒழிந்த வேளைகளில் புத்தகங்களைப் படித்துக்கொண்டிருப்பான். அதனால், அவன் அறிவு விசாலமடைந்து வந்தது.

அவன் தனக்குத் தன் தமையன்மார் இழைத்து வந்த துன்பங்கள் அனைத்தையும் இன்பங்களாகப் பாவித்து, அவர்களை மன்னித்து அருளும்படி முழு முதற் கடவுளைப் பன்முறை வேண்டிக்கொண்டான்.

சிறுவர்களே, நீங்களும் குமர நாதனைப் பின் பற்றி நடந்தால், கல்வி கேள்விகளில் வல்லவர்களாகி எவரும் போற்றிப் புகழும் நிலைமையை அடைவீர்கள் என்பது திண்ணம்.

சங்கரனும் ஹரிஹரனும், தத்தம் எண்ணங்களுக்கு ஏற்றபடி, விகார ரூபமுடையவராய் இருந்தனர். கடுகடுத்த முகமும் படபடத்த வாயும் பொருந்திய அவர்களைக் கண்டோர் அனைவரும் அஞ்சி நடுங்கினர். ஒருவராகிலும் அவர்களை நேசிக்கவில்லை. பாம்பைக்கண்டால் படையும் நடுங்கும் அன்றோ? அப்-

பாம்பைப் பிரியமுடன் போற்றி வளர்ப்பவர் எவராயினும் உளரோ!

குணசாலியான குமர நாதன் அழகு மிகுந்தவன். அவனுடைய 'அறங்கிடந்த நெஞ்சும் அருள் ஒழுகு கண்ணும்' அவ்வூரார் எல்லாரையும் அவனைத் தஞ்சம் என அடையச் செய்தன. அவனுடைய அண்ணன்மாரைத் தூஷிப்போர் அவனைப் பூசிக்கலாயினர்; விசுவ நாதருடைய குல விளக்கென மதித்துப் போற்றினர்.

அத்தியாயம்—2

## பஞ்சத்தின் கொடுமை

பல வருஷங்கள் பறந்தன.

சங்கரன், ஹரிஹரன் ஆகிய இருவரும் சூதாடல், கள்ளுண்டல், பொய் மொழிதல், ஈதல் மறுத்தல், உலோபத் தன்மை முதலியவற்றில் நாளுக்கு நாள் தேர்ச்சி அடைந்து வந்தனர். ஆயினும், அவர்கள் அதிக பணச் செலவு செய்யவில்லை.

பிறருக்கு நன்மையேயன்றித் தீமையொன்றும் செய்தறியாத குமர நாதன் நிலைமை மிகவும் பரிதபிக்கத் தக்கதாய் இருந்தது. அவன் அவர்களிடம் சிக்கிக்கொண்டு, படாத பாடு பட்டான்; அவர்களை விட்டுத் தப்பியோடவும் வகை அறியாது இருந்தான். பொழுது விடிந்து பொழுது சாயும் வரையில் அவர்கள் அவனைப் பல விதத்திலும் இமிசித்து வந்தார்கள்.

*　　*　　*

வேனிற் காலம் வந்தது. பொற்களமென்னும் பள்ளத்தாக்கைச்சூழ்ந்திருந்த கிராமங்களில் நெற்கதிர்கள் பொற்கதிர்களே போல வெகு செழிப்புடன் விளைந்து மிளிர்ந்தன; பல நிறமுடைய கனி வர்க்கங்கள் கண்களைக் கவர்ந்தன; குயில் முதலிய பறவைகள் தீங்குரலாய்க் கானம் பண்ணின; மயில்கள் தோகை

விரித்து ஆடின. அங்கு இயற்கைத் தேவி சிறக்க வீற்றிருந்தாள்.

அது சமயம், ஆகாயத்தில் கருக்கொண்ட மேகங்கள் சூழ்ந்தன. சூரியனுடைய கிரணங்கள் அவற்றை ஊடுருவிச் செல்ல இயலாமையால், அக்கிராமங்கள் இருண்டன. தென்றல் காற்று மாறி, வாடைக் காற்று வீசத் தொடங்கிற்று. சிறிது நேரத்திற்குள் மழை ஜோவென்று பெய்ய ஆரம்பித்து, ஒரு வாரம் விடாமல் பெய்தது. நெற்பயிர்கள் பாழாயின; கனி வர்க்கங்கள் கீழே விழுந்து அழுகிப் போயின; திராக்ஷைக்கொடிகள் துண்டுதுண்டாய் முறியுண்டன. எங்கும் பஞ்சம் உண்டாயிற்று. அந்தக்கிராம வாசிகள் உண்ண உணவு இன்றிப் பரிதவித்தார்கள்.

ஆனால், பொற்களமென்னும் பள்ளத்தாக்கில் அகால மழை பொழியவும் இல்லை; நெற்பயிர்கள் கனி வர்க்கங்கள் முதலியவை அழியவும் இல்லை. அவ்வருஷம் நிலம் மிக்க பலனை அளித்தது. கன்மனக் கயவராகிய சகோதரர் இருவரும் சுயநலப் புலிகளாகையால், தம் பணியாட்களை வைத்து உழுது பயிர் செய்த நிலங்களில் விளைந்த நெல் முதலிய தானியங்களைச் சேமித்து வைப்பதிலும், மரம் செடி கொடிகளில் கனிந்த கனி வர்க்கங்களை அந்நிய நாடுகளுக்கு அவ்வப்போது ஏற்றுமதி செய்வதிலும் ஈடுபட்டு இருந்தனர். பணம் மலை போலக் குவிந்தது.

அண்டை அயலில் உள்ள கிராமங்களில் பஞ்சத்தால் வாடி மெலிந்த கிராம வாசிகள் பொற்களத்திற்கு

நெல் வாங்க வந்தார்கள். அப்போது இரு சகோதரரும் அந்தக் கிராம வாசிகளின் பரிதாபகரமான நிலைமைக்கு வருந்தாமல், மேலும் மேலும் பணம் சேமிப்பதற்கு அதுவே தகுந்த தருணம் என்று நினைத்துத் தம்மிடம் இருந்த நெல்லை அநியாய விலைக்கு விற்றனர். நெல் இல்லாமல் உயிர் வாழ்தல் அருமையாதலால், அவ்வேழை ஜனங்கள் அவர்கள் சொன்ன விலையைக் கொடுத்து நெல் வாங்கிக்கொண்டு போனார்கள். நெல் வாங்குவதற்குப் போதுமான பணம் இல்லாத பரம ஏழைகள் இரந்துண்ணப் பொற்களத்திற்கு வந்து, ஒன்றும் கிடைக்கப்பெறாமல் மன வருத்தத்துடன் திரும்பிப் போயினர். அங்கு, அநேகர் பல நாள் பட்டினி கிடந்ததால், காதடைத்துக் கண்ணிருண்டு களைத்து உடல் இளைத்து உயிர் துறந்தனர்.

சங்கரனுக்கும் ஹரிஹரனுக்கும் தெரியாமல் குமர நாதன் அநேகருக்குத் தன்னால் கூடிய பண உதவி செய்தான்; நெல், கனி முதலியன வாரி வாரிக் கொடுத்தான். அவர்கள் தங்களை வருத்தும் பசிப்பிணி நீங்கி, அவனை வாயார வாழ்த்தினார்கள்.

* * *

இவ்வாறு பல மாதங்கள் சென்றன. பஞ்சத்தின் கொடுமை சிறிது நீங்கிற்று. பாவியான இரு சகோதரரும் பச்சாத்தாபம் இன்றி, கிராமக் குடிகளிடமிருந்து தங்களுக்குச் சேர வேண்டிய கட்டண நெல்லை ஒரு மணியும் விடாமல் வசூலித்தனர்; கட்ட வேண்டிய கட்டண நெல்லைக் கட்டத் தவறினவர்களின் துணி மணிகளையும், தட்டு முட்டுகளையும், அவர்கள் உழுது

வந்த நிலங்களையும் பிடுங்கிக்கொண்டு, அவர்களைப் பராரிகளாக்கித் துரத்தினர்.

குமரநாதனுக்கு அக்கொடிய செய்கைகளைக் காண மனம் சகிக்கவில்லை. அவன் சங்கரனை நோக்கி, "அண்ணு, கடவுள் நமக்குப் போதுமான திரவியமும் பூஸ்திதியும் கொடுத்திருக்கிருர். அவற்றைக் கருவியாகக் கொண்டு நாம் பிறருக்கு உதவி செய்யின், கடவுளுக்கும் நம்மீது பிரியமும் கருணையும் உண்டாகும். அவ்விதம் செய்யாமல் நாம் அவற்றைக்கொண்டு நமது சுக போகங்களுக்கு அநுகூலங்கள் ஏற்படுத்திக்கொள்வது பெரும்பிசகாகும். அவ்விதம் நாம் நம்முடைய சுகபோகங்களையன்றிப் பிறருடைய அசௌகரியங்களைப் பொருட்படுத்தாது இருப்பதும் ஒரு வேளை நன்மையெனக் கருதினுலும் கருதலாம். ஆனுல், ஏழைகளைத் துன்புறுத்திநிராதரவாக இருக்கும் அவர்களிடமிருந்து நமக்குச் சேர வேண்டிய கட்டண நெல்லைப் பலாத்காரமாக வசூலிப்பது கடவுளும் மன்னிக்க இயலாத பெரும்பாதகத் தொழிலே ஆகும். 'ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்,' என்னும் பழமொழியை நீங்கள் அறியாமற் போனதென்ன ?" என்று நீதி மொழிகள் புகன்ருன்.

அச்சொற்களைக்கேட்டதும் சங்கரனுக்குக்கோபம் பொங்கி எழும்பிற்று. "அடா, துஷ்டா! நீயா எனக்குப் புத்தி சொல்வதற்கு வந்தாய்? உலக வியவகாரம் உனக்கென்ன தெரியும் ? நேற்றுப் பிறந்தவன் நீ!" என்று கூறி, குமர நாதனை உதைத்துத் தள்-

ளினன். அவன் துள்ளி முகங் குப்புறக் கீழே விழுந்து மூர்ச்சையாயினன்.

சங்கரன் அவனை அப்படியே விடுத்து அப்புறஞ் சென்றான்; ஹரிஹரனுக்கு அவ்விஷயத்தைத் தெரி-வித்தான். அவனும் மூர்ச்சையினின்றும் சிறிது தெளிந்து எழுந்து உட்கார்ந்திருந்த குமர நாதனை நையப் புடைத்தான்; வசை மொழிகளால் அவனை வாயார வாழ்த்தினன். இருதலைக் கொள்ளி எறும்பே போல அவ்விருவரிடம் சிக்கிக்கொண்டு அவஸ்தைப் பட்ட குமர நாதன் அப்போதுகூடக் கடவுளை நோக்கி, "ஏழை பங்கா, அடியவர்க்கு எளியாய், இத்துஷ்டர் இருவரையும் மன்னித்து, இவர் சன்மார்க்கராக வாழ அருள் புரிவாயாக! இவர்கள் தாங்கள் செய்யும் குற்றங்களை உணராமல், பரம சண்டாளர்கள் ஆனார்கள். இவர்களைக் காப்பது உன் கடன்," என்று பிரார்த்தித்-துக்கொண்டான்.

சிறுவர்களே, குமர நாதனைப் போன்ற உத்தமச் சிறுவனைப்புத்திரனாக அடைந்தவர்கள் பாக்கியசாலிகள் என்றே கருதவேண்டும். அவன் ஏழைகள்மீது கருணை உள்ளவன்; அதுவுமன்றி, தன்னைத் துன்புறுத்தும் துஷ்டருக்கும் நன்மை செய்ய விரும்பும் தூய்மை-யாளன். அவன் ஒரு போதும் பொய் பேசி அறியான். அவன் ஒரு பிராணிக்கும் தீமை செய்ததே இல்லை. நீங்களும் சிறு வயதில் இருந்தே இவ்வித நற்குணங்-களில் பழகி வந்தால், பல விதங்களிலும் உங்களுக்கு நன்மை ஏற்படுவது நிச்சயம்.

* * *

கார் காலம் வந்திருந்தது. கள்ளுண்டு, வெறி கொண்டு ஆடுபவர்களுக்கு அஃது ஏற்ற காலம் அன்றோ! அக்காலத்தில் சங்கரனும் ஹரிஹரனும் அதிகாலையில் வீட்டைவிட்டுக்கிளம்பி, தங்களையொத்த துஷ்டருடன் கூடிக்கொண்டு, குடிப்பதிலும் சூதாடுவ-திலும் ஈடுபட்டு, மத்தியான வேளையில் வீட்டுக்குத் திரும்பிவருவார்கள். குமரநாதன் அதற்குள் சமையல் செய்து முடித்துத் தயாராய் இருக்க வேண்டும். சமையல்வேலை முடிவதற்குச் சிறிது தாமதம் ஆயின், அவன் கதி அதோகதிதான். அவர்கள் பகற் போஜ-னம் முடித்து, குடித்து வெறித்து ஆடிய அயர்வு தீர இரண்டு மூன்று மணி நேரம் வரையில் நித்திரை செய்வார்கள். அவர்கள் தங்களையே மறந்து தூங்கும் சமயத்திலேதான் குமர நாதன் தன்னிடம் இருக்கும் இலக்கிய இலக்கணங்களையும் வேதாந்த சித்தாந்த நூல்களையும் ஐயம் திரிபு அற ஓதுவது வழக்கம்.

நித்திரையினின்று எழுந்ததும் அவர்கள் தங்-களுக்கு மேஜையின்மீது வைத்திருக்கும் சிற்றுண்டி-களைச் சாப்பிட்டுவிட்டு, வெளிக்கிளம்பிவிடுவார்கள். வெளியிற் சென்றவர்கள் வீட்டிற்குத் திரும்ப இரவு ஒன்பது, பத்து மணி ஆகும். அது வரையில் குமர நாதன் நித்திரை நீங்கி, அவர்கள் வரும் வழிமேல் விழி வைத்துக் காத்துக்கொண்டு இருப்பான். அவர்-கள் அவனைத் தங்கள் அடிமையாகப் பாவித்தார்கள்.

*　　*　　*

ஒரு நாள் விடியற்காலையில் சங்கரனும் ஹரிஹர-னும் வழக்கம்போல வெளியிற் சென்றனர். வெளியே

போகும்போது அவர்கள் குமர நாதனை நோக்கி, "அறிவு கெட்ட நாயே! நாங்கள் வெளியில் போன பிறகு நீ மூடிய கதவு மூடியபடியே இருக்கவேண்டும். நீ எவரையும் எக்காரணம் பற்றியும் வீட்டுள் நுழைய விடக் கூடாது; எவருக்கும் எப்பொருளும் கொடுக்கவே கூடாது; ஜாக்கிரதை!" என்று உறுமினார்கள்.

குமர நாதன் :—நான் உங்கள் கட்டளைப்படி நடக்கச் சித்தமாய் இருக்கிறேன்.

சங்கரன் :—நீ எங்கள் கட்டளையை மீறினால், உன் உயிர் உடலில் தங்காது. தெரியுமா?

குமர நாதன் :—சித்தம்.

* * *

இருவரும் வீட்டை விட்டு வெளிப் போந்தனர். குமர நாதன் வீட்டின் தெருக் கதவை மூடித் தாளிட்டான்; சமையல் தொழிலில் இறங்கினான். வானம் இருண்டு மழை பொழிய ஆரம்பித்தது. வாடைக் காற்று வெகு பலமாய் வீசிற்று. பொற்களம் முழுவதும் வெள்ளம் ஓடிற்று. அடுப்பண்டை உட்கார்ந்து மாமிச வகைகளைப் பொறித்துக்கொண்டிருந்த சிறுவன் உள்ளத்தில் ஒரு வித மகிழ்ச்சி உண்டாயிற்று.

"இத்தகைய சுவையுள்ள பதார்த்தங்களை நாங்கள் மூவரே உண்பதில் என்ன சுகம் இருக்கிறது! மனிதர் பிறருக்கு இட்டுத் தாமும் உண்பதன் சிறப்பை எடுத்துரைக்க முடியுமோ!

'உண்ணான்; ஒளிநிறான்; ஓங்கு புகழ்செய்யான்;
துன்னருங் கேளிர் துயர்களையான்;—கொன்னே

வழங்கான் பொருள்காத்து இருப்பானேல் அஆ!
இழந்தான்என்று எண்ணப் படும்.'

என்னும் கூற்றின் உண்மையை என் அண்ணன்மார் அறியாமற் போனதென்ன! தினந்தோறும் எங்களுடன் இருபது முப்பது ஏழைகள் வயிறார உண்பதில் எங்களுக்கு வரும் நஷ்டம் என்ன!" என்று தானே பேசிக்கொண்டு இருந்தான்.

இவ்வாறு பேசிக்கொண்டு இருக்கையில் வீட்டின் தெருக்கதவை எவரோ தபதப என்று தட்டும் சத்தம் அவன் காதில் விழுந்தது. அவன் சிறிது நேரம் கூர்ந்து கவனித்தான். "இது வெளியில் பொழியும் மழையின் சத்தமேயன்றி வேறன்று; என் அண்ணன்மாரின் தன்மையை நன்றாய் அறிந்துள்ள இவ்வூரார் எவரும் தைரியமாய் இவ்வீட்டின் தெருக் கதவைத் தட்டவே மாட்டார்," என்று நினைத்து, வாளாவிருந்தான்.

*          *          *

சிறிது நேரம் அமைதியாய் இருந்தது.

## அத்தியாயம்—3

### விருத்தாப்பிய விருந்தாளி

அவன் காதில் விழுந்த சத்தம், அவன் நினைத்தபடி மழையால் உண்டான ஓசை அன்று. ஏனெனில், மறுபடியும் அவ்வீட்டின் தெருக் கதவை வெகு அவசரமாகவும் உரத்த ஓசையுடனும் எவரோ தட்டினர். அவ்விதம் தட்டினவர் எதற்கும் அஞ்சாதவராக இருக்க வேண்டுமென அச்சிறுவனுக்குத் தோன்றிற்று.

வீட்டின் தெருக்கதவைத் தட்டுபவர் எவர் என்று அறிய ஆவல் கொண்ட குமரநாதன், சரேலென்று எழுந்து, தெருக் கதவண்டையிற் சென்று, கதவைத் திறவாமல், வீதியைப் பார்த்தபடியிருந்த ஜன்னல் திறப்பின் வழியே வெளியில் நோக்கினன்.

வீட்டின் வெளிப்புற வாயிற்படியண்டையில், கிழவன் ஒருவன், பல இடங்களிலும் கிழிந்ததும், அழுக்குப் படிந்ததும், மழையில் நனைந்ததுமான நெட்டங்கி ஒன்றை அணிந்த வண்ணம் குளிர் தாங்க முடியாமல் கை கால்கள் நடுங்க நின்றுகொண்டு இருந்தான். நீண்டு வளர்ந்ததும் நரை மிகுந்ததுமான தாடி அவன் மார்பு வரையில் தொங்கிக்கொண்டிருந்தது. அவன் குள்ளன்; மூன்று அடி உயரமே வளர்ந்திருந்தான். அவன் தலையில் கோமாளி தரிப்பதைப் போல நீண்டு

வளைந்த குல்லா ஒன்றைத் தரித்திருந்தான். அந்தக் குல்லாவும் முழுவதும் நனைந்து இருந்தது. மழை நீர் தாடியில் வடிந்து, அவன் வயிற்றின்மேல் விழுந்து-கொண்டிருந்தது.

அந்த அந்நியனைக் கண்டதும் குமர நாதன் ஆச்-சரியம் அடைந்தான்; ஒன்றும் பேசாமல் உட்புறத்-தில் ஜன்னலுக்கு அருகில் மறைந்து நின்ருன். அவ்-விதம் அவன் நின்றுகொண்டு இருந்ததை அறியாத கிழவன், மறுபடியும் வெகு துரிதமாகவும் உரக்கவும் படபடவென்று கதவைத் தட்டினுன்; ஜன்னல் பக்-கம் திரும்பினுன்; மறைந்து நின்ற குமர நாதனைக் கண்டான்; "அப்பா, எவ்வளவு நேரம் நான் நின்று கொண்டு இருப்பது! என் உடல் முழுவதும் நனைந்து இருக்கிறது. நான் குளிரால் வருந்துகிறேன். சீக்கிரம் கதவைத் திறந்து என்னை உள்ளே விடு," என்ருன்.

குமர நாதன்:—ஐயா, நான் என்ன செய்வது? உம்மை உள்ளே விடுவதற்கு எனக்கு அதிகாரம் இல்லையே!

கிழவன்:—ஏன்?

குமர நாதன்:—நான் உம்மை உள்ளே விட்டால், என் தமையன்மார் என்னை அடித்துக் கொன்றுவிடு-வர். உமக்கு என்ன தேவை? அதை எனக்குத் தெரிவித்தல் நலம்.

கிழவன் தனது முகத்தைச் சுளித்துக்கொண்டு, "எனக்கு என்ன தேவை என்ரு கேட்கிருய்? எனக்-

குத் தங்க இடமும் குளிர் காய நெருப்பும் தேவை. உள்ளே அடுப்புக் கனகனவென்று எரிவது எனக்குத் தெரிகிறதே! அந்நெருப்புக் கனலை யார் அனுபவிப்பவர்? தயை செய்து கதவைத் திறந்து என்னை உள்ளே விடு. நான் குளிர் காய வேண்டும்," என்றான்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட குமர நாதன், "ஐயோ! பாவம்! இக்கிழவன் உண்மையில் நனைந்து இருக்கிறான். இவனால் குளிர் தாங்க முடியவில்லை. கால் மணி நேரமாவது இக்கிழவனை நமது அடுப்பண்டையில் உட்கார வைப்போம்," என்று தனக்குள் நினைத்து, அத்தள்ளாதவன்மீது பரிதாபம் கொண்டு, தாழ்ப்பாளை நீக்கிக் கதவைத் திறந்தான்.

அவன் திறந்ததுதான் தாமதம். கிழவன் சரேலென உள் நுழைந்தான். "நீ செய்தது நல்ல காரியம்! உன் தமையன்மாருக்கு நீ அஞ்ச வேண்டுவதே இல்லை. நான் அவர்களிடம் பேசிக்கொள்கிறேன்," என்றான்.

குமர நாதன்:—அப்பப்பா! தயை செய்து நீர் அவர்களிடம் பேசவே கூடாது. அவர்கள் திரும்பி வருகிற வரையில் உம்மை நான் இங்குத் தங்க விடேன். நீர் இங்கு இருப்பதைக் கண்டால், அவர்கள் என்னைக் கொன்றுவிடுவார்கள்.

கிழவன்:—அப்பா, நீ சொல்வதைக் கேட்க என் மனம் வருந்துகிறது. நான் இங்கு இன்னும் எவ்வளவு நேரம் தங்கலாம்?

குமர நாதன்:—நான் இந்த மீன் துண்டங்களைப் பொரித்து அடுப்பிலிருந்து இறக்குகிற வரையில் தங்கலாம். இப்போதே மீன் துண்டுகள் நன்றாய்ச் சிவந்திருக்கின்றன.

கிழவன் சிறுவன் சொன்னதைக் கவனிக்கவே இல்லை. அவன் சிறிது தூரம் நடந்து போய், அடுப்பண்டையில் உட்கார்ந்தான்.

குமர நாதன், "ஐயா, உமது உடை சீக்கிரம் உலர்ந்துவிடும்," என்று சொல்லிக்கொண்டே மீன் துண்டுகளைத் திருப்பிப் போட்டான்.

கிழவன் நெட்டங்கியிலிருந்தும், குல்லாவிலிருந்தும், தாடியில் இருந்தும் மழை நீர் அருவி போல ஓடிற்று. அதனால், அடுப்பங்கரை முழுதும் நனைந்து, அடுப்பில் இருந்த நெருப்பும் அணைய ஆரம்பித்தது.

அதைக் கண்ட குமர நாதன் குடல் நடுங்கினான்; தன் அண்ணன்மார் அடுப்பங்கரை நனைந்திருப்பதைக் காணின், தன்னைக் குத்திக் கொல்வார்கள் என்று அஞ்சினான்.

அவன் அவ்வயோதிகனைப் பார்த்து, "ஐயா, பெரியவரே, உமது நெட்டங்கியையும் குல்லாவையும் கழற்றிவிடட்டுமா?" என்று கேட்டான்.

கிழவன்:—வேண்டா.

குமர நாதன்:—ஐயா, தாங்களாயினும் அவற்றைக் கழற்றிவிடுங்கள். இல்லாவிட்டால்......

கிழவன்:—இல்லாவிட்டால், மீன் துண்டுகளைப் பொரிப்பதற்கு நேரமாகும் என்று நினைக்கிறாயோ?

குமர நாதன் என்ன செய்வது என்றும் என்ன சொல்வதென்றும் அறியாமல், வாயைத் திறவாமல் மீன் பொரியலைக் கவனித்தான். பத்து நிமிஷங்கள் சென்றன.

கிழவன் :— பொரிக்கும் மீன் துண்டங்களின் வாசனை கமகமவென்று வீசுகிறது; என் மூக்கைத் துளைக்கிறது. அவற்றில் எனக்கு ஒரு துண்டு கொடுக்கிறாயா ? என் நா ஊறுகிறது.

குமர நாதன், "இப்பெரியவருடைய ஆவலைத் தணிப்பது நல்லது. மீன் துண்டு ஒன்றைக் கொடுக்கும் அதிகாரம் எனக்கு இல்லையே! என் அண்ணன்மார் இவற்றைக் கணக்கிட்டு வைத்துப் போயிருக்கின்றனர். இவற்றில் ஒன்று குறைந்தாலும், என் உயிர் போவது நிச்சயம்," என்று தனக்குள் நினைத்துக்கொண்டு, அருகில் உட்கார்ந்திருந்த கிழவனைப் பார்த்து, "ஐயா, உமது இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய நான் விரும்புகிறேன். இதை அறியின், என் அண்ணன்மார் என்னை வீணே அடித்துத் துன்புறுத்துவரே! அதற்கு நான் என்ன செய்வேன்?" என்றான்.

கிழவன், "அப்பா, என்னால் பசி பொறுக்கக் கூடவில்லை. எனக்கு ஒரே ஒரு துண்டு போதும். நேற்றிலிருந்து நான் பட்டினி கிடக்கிறேன். இத்தனை துண்டுகளில் ஒரு துண்டை எடுத்து எனக்குக்

கொடுத்துவிட்டால், அஃது உன் அண்ணன்மாருக்கு எவ்விதம் தெரியும்— நீயே அவர்களுக்குச் சொன்னு லொழிய!" என்ருன்; இளைப்பால் பெரிதும் துவண்டான்.

கிழவனது பரிதாப நிலைமையைக் குமர நாதன் கவனித்தான்; அவன்மீது இரக்கங் கொண்டான்; "இத்தள்ளாதவரின் பசியைத் தணிப்பதிலும் சிறந்த தருமம் என்ன இருக்கிறது? என் பங்கு மீன் துண்டை ஆகிலும் இவருக்குக் கொடுத்துவிடுகிறேன். அதற்காக அவர்கள் என்னை அடித்தாலும், அடிக்கட்டும். தானம் செய்யாமல் நெடுங்காலம் இருப்பதிலும், தானம் செய்து சீக்கிரம் இறப்பது நலம்," என்று நினைத்துக்கொண்டே ஒரு மீன் துண்டத்தைக் கரண்டியில் எடுத்து, அக்கிழவனிடம் கொடுத்தான். அது சுட்டதால், கிழவன் அதை உடனே தின்பதற்குக் கூடாதிருந்தது.

அத்தியாயம்—4

## கன்மனக் கயவர்

அது சமயம், அவ்வீட்டின் கதவைப் படபட-வென்று சங்கரனும் ஹரிஹரனும் தட்டி-னர். அச்சத்தத்தைக் கேட்டதும் கிழவன் தன் கையி-லிருந்த மீன் துண்டத்தைக் கீழே வைத்துவிட்டுத் திடுக்கிட்டு எழுந்தான். கிழவன் கீழே வைத்த மீன் துண்டத்தைக் குமர நாதன் கையில் எடுத்து, இதர மீன் துண்டங்கள் இருந்த பாத்திரத்தில் போட முயன்றான். அது கீழே இருப்பதைக் கண்டால் அவன் அண்ணன்மார் அவனைக் கோபிப்பர் என்று அவன் பயந்தான். குமர நாதன் அவ்விதம் செய்வதை அக்கிழவன் தடுத்து, "நீ செய்வது நியாயம் அன்று. பிறர்க்குக் கொடுத்ததைத் திரும்பவும் வாங்கிக்கொள்-ளலாமா?" என்றான்.

இதற்குள் சில விநாடிகள் சென்றன. குமரநாதன் ஓடிப்போய்த் தெருக் கதவைத் திறந்தான். குடி வெறியால் கண் சிவந்து இருந்த சங்கரன், "கதவைத் திறப்பதற்கு உனக்கு இவ்வளவு நேரமா! நாங்கள் மழையில் எவ்வளவு நேரம் நனைந்துகொண்டு இருப்-போம்!" என்று கடிந்து, தன் கையில்இருந்த குடையை அவன்மீது வீசி எறிந்தான்.

ஹரிஹரன், "வீதியில் எங்களை நீ எவ்வளவு நேரம் காக்க வைப்பது! வீட்டுள் நீ இதுவரையில்

என்ன செய்துகொண்டிருந்தாய்?" என்று சொல்லி, அவன் இடக் கன்னத்தில் பளீர் என்று ஓர் அறை அறைந்தான். குமர நாதன் சுழன்று சுழன்று நடையின் ஒரு மூலையில் போய் விழுந்தான்.

சகோதரர் இருவரும் தம் பெருமிதம் தோன்ற வெகு கம்பீரத்துடன் கர்ச்சித்த வண்ணம் நடந்து, சமையல் அறைக்குள் சென்றனர்; அங்கு நரை திரை மிகுந்த கிழவன் ஒருவன் நிற்பதைக் கண்டனர். அவ்விருவரின் கோபக் குறியைக் கவனித்த அக்கிழவன், வெகு வணக்கத்துடன் அவர்களை நமஸ்கரித்து நின்றான்.

சங்கரன் அங்கு உறியில் செருகியிருந்த மத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, இதற்குள் தானே சுதாரித்து எழுந்து உட்கார்ந்துகொண்டு இருந்த குமர நாதனைப் பார்த்து, நெடுங்குரல் பாய்ச்சி, "இக்கிழவன் யாவன்? இவன் இங்கு வருவானேன்? இம்மடைப்பள்ளிக்கு இவன் அதிகாரியோ?" என்றான்.

குமர நாதன் சங்கரன் கையில் இருந்த மத்தைக் கண்டதும் நடுநடுங்கி, "அண்ணா, இவர் யாரோ! எனக்கு ஒன்றும் தெரியாது," என்றான்.

சங்கரன், "அப்படியானால், இவன் எவ்வாறு இச்சமையல் அறைக்குள் நுழைந்தான்?" என்று கூறி, குமர நாதனை அடிக்கத் தன் கையில் இருந்த மத்தை ஓங்கினான்.

குமர நாதன், "இல்லை, அண்ணா,.....இவர் மழையில் நனைந்து, குளிரால் மெத்தவும் வருந்தினார்......

அதனுல்......" என்று கூறிக்கொண்டிருக்கையில், சங்-கரன் கையில் இருந்த மத்துக் குமர நாதன் மண்டை-யை நோக்கி வந்தது.

அந்த ஆபத்தான வேளையில் அங்கு நின்றிருந்த கிழவன் அவ்விருவருக்கும் இடையில் நுழைந்து, குமர நாதன் மண்டைக்கும் மத்துக்கும் மத்தியில் தன் நீண்ட குல்லாவை நீட்டினுன். குமர நாதன் மண்டை-யில் விழ இருந்த மத்தடி, கிழவன் குல்லாவின்மீது விழுந்தது. ஆனுல், மத்துக் கிழவன் குல்லாவைத் தொட்டதும் வெகு ஆச்சரியகரமாய்ச் சங்கரன் கையை விட்டு நீங்கி, அங்கு ஒரு மூலையில் போய் விழுந்தது.

அதன்மேல் சங்கரன் தன் கண்களில் தீப் பொறி பறக்க அக்கிழவனைக் கடுகடுத்து நோக்கி, "ஐயா, நீ யார்?" என்று கேட்டான்.

ஹரிஹரன் கிழவனைப் பார்த்து, "நீ இங்கு வர வேண்டிய காரணம் என்ன?" என்று மிரட்டினுன்.

கிழவன்:—ஐயன்மீர், நான் ஓர் ஏழைப் பரதேசி. எனக்குப் பசி அதிகமாய் இருந்ததாலும், நான் மழையில் நனைந்து குளிர் தாங்க மாட்டாமல் இருந்த-தாலும், குளிர் காயலாம் என்றும் வயிருர அன்னம் புசிக்கலாம் என்றும் நம்பி இங்கு வந்தேன்.

சங்கரன்:-அப்படியானுல், நீ வந்த வழியே திரும்-பிப் போகலாம். இன்னும் எங்கள் சமையல் அறையை நனைத்துவிடாதே.

கிழவன், "ஐயா, வெளியில் குளிர் அதிகமாய் இருக்கிறது. பசியால் நடக்கவும் சக்தி இல்லாதிருக்-

கும் என்னைத் தாங்கள் வெளியிற்போகச் சொல்வது நியாயம் அன்று. என் தலை மயிர் எவ்வளவு நரைத்திருக்கிறது, பாரும்! இன்னும் சிறிது நேரம், மழை நிற்கிற வரையில் நான் இங்கு இருந்துவிட்டுப் போகிறேன்," என்று கெஞ்சிக் கூத்தாடினன்.

சங்கரன்:—மழையில் நனைந்தும் வெயிலிற் காய்ந்தும் பழக்கப்பட்ட உனக்குத் தங்குவதற்கு இடம் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

கிழவன்:—ஐயா, எனக்குஅதிகமாய்ப் பசி எடுக்கிறது. நான் இவ்வீட்டை விட்டு வெளியில் போவதற்கு முன் நீர் உண்பதற்கு யாதாயினும் கொடுப்பீர் என்று நம்புகிறேன். பசி பொறுக்கக் கூடவில்லை.

சங்கரன்:—உனக்குமா பசி எடுக்கிறது! நீ பட்டினி கிடந்ததே இல்லையோ? உன்னை ஒத்த சோம்பேறிகளுக்கு அன்னம் இடுவது அதிக பாவம்.

ஹரிஹரன் இடையில் நுழைந்து, "உன் குல்லாவை விற்றாலும் உனக்குத் தேவையான பணம் கிடைக்குமே! அதைக்கொண்டு நீ உன் பசியைத் தீர்த்துக்கொள்ளலாமே!" என்று கூறினன்.

கிழவன்:-பணக்காரர்களாகிய நீங்களே இவ்விதம் சொன்னல், ஏழையாகிய நான் என்ன செய்வது? கொஞ்சம் அன்னம் கொடுத்து என் பசியைத் தணிக்க வேண்டும்.

"கிழவா, இப்போதே நீ இவ்விடத்தை விட்டுச் செல். உன்னிடம் பேசிக்கொண்டிருக்க எங்களுக்கு அவகாசம் இல்லை," என்றான் சங்கரன்.

கிழவன்:—ஐயன்மீர், கோபம் வேண்டா. என் பசியை நீக்குங்கள். நான் இவ்விடத்தைவிட்டுப் போய்-விடுகிறேன்.

ஹரிஹரனுக்குக் கோபம் பொங்கிவந்தது; "வீட்-டுக்கு வெளியே போ என்றால், போகாமல் இங்கேயே நின்று உளறுகிறாயா!" என்று கூறி அக்கிழவன் கழுத்-தைப் பிடித்துத் தள்ள யத்தனித்தான். கிழவன் கழுத்தில் கை வைத்த உடனே ஹரிஹரன் பம்பரம் போலச் சுழன்று சுழன்று கால் தடுக்கிக் கீழே விழுந்-தான். ஹரிஹரன் விழுந்ததைக் கண்டதும் சங்கரன் சமையல் அறையின் நடுவில் புன்னகை செய்துகொண்டு அசையாமல் நின்றிருந்த கிழவனை எதிர்க்கச் சென்-றான். அவன் கிழவனைத் தொடுவதற்கு முன்னமே காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சுபோல இங்கும் அங்குமாகத் தாள்ளாடிக்கொண்டே போய் அவனை அறியாமலே ஹரிஹரன்மீது தொப்பென்று வீழ்ந்து, சுவரில் மோதிக்கொண்டான்.

யாதொரு மனக் கலக்கமும் இல்லாமலும், கண் இமை கொட்டாமலும், நின்றிருந்த இடத்தை விட்டுப் பெயராமலும் அக்காட்சியைப் பார்த்து ஆனந்தம் கொண்ட கிழவன், "இம்மூட சிகாமணிகள் நான் யாவன் என்பதை அறிந்திலர். 'கன்மனக் கயவர்' என்-னும் பழிப் பெயர் இவ்விருவருக்கும் பொருந்தும். அபரிமிதமான திரவியம்வைத்திருந்தும், இவர்களுக்கு இரக்கம் என்பது கிஞ்சித்தும் இல்லையே! இவர்கள் விசுவ நாதருக்குப் புதல்வர்களாகப் பிறக்கத் தகுதி அற்றவர்கள் என்பதில் சந்தேகமேஇல்லை. அவர் பூர்வம்

செய்த வினைப்பயனே இரு புத்திரராக உருக்கொண்டு உலகில் ஜனித்திருக்கிறது என்று கூறலாம். பொற்களக் குரிசிலாம் குமரநாதன் மகா உத்தமன். இவ்விள வயதிலேயே அவனுக்குக் கடவுள் பக்தி, கல்வியறிவு, இரக்கம், பரோபகாரம், ஜீவ காருண்யம் முதலியன ஒருங்கே பொருந்தி இருப்பது ஆச்சரியத்தினும் ஆச்சரியமே,'' என்று தன் மனத்துள் நினைத்துக்கொண்டு, கீழே விழுந்த அயர்வு நீங்கி எழுந்து உட்கார்ந்திருந்த சங்கரனையும் ஹரிஹரனையும் நோக்கி, "ஐயன்மீர், நான் இங்கு வந்து நெடுநேரம் ஆகிறது. இனி நான் இவ்விடத்தில் தங்கி இருப்பது தகாது. அதனால், உங்களுக்கு மன வருத்தம் நேரிடும் என்று அஞ்சுகிறேன். நீங்கள் என்னைப் படுத்திய பாடு என் ஞாபகத்தில் இருக்கிறது. அதை நான் எக்காலமும் மறக்கவே மாட்டேன். இன்றைத் தினம் இரவு பன்னிரண்டு மணிக்கு உங்களை மறுபடியும் வந்து காண்கிறேன்,'' என்று கூறிய வண்ணம் சமையல் அறையை விட்டு வாசலுக்கு வந்தான்.

அது சமயம் மூலையில் விழுந்துகிடந்த ஹரிஹரன் சற்று எழுந்து உட்கார்ந்து, "நீ இங்கு மறுபடியும் வந்தால்'' என்று ஆரம்பித்துத் தன் எண்ணத்தை முடிப்பதற்குள் கிழவன் வெளிச்சென்று தெருக் கதவைச் சாத்திக்கொண்டு போய்விட்டான்.

அதே நிமிஷம் வானம் இருண்டது; அவ்வப்போது அவ்விருளைக்கிழித்த வண்ணம் மின்னல் மின்னிற்று. இடி இடித்தது. வாடைக்காற்று வெகு பலமாய் வீசிற்று. ஜோவென மழை பொழிந்தது. பொற்களம் முழுவதும் மழை நீர் அருவிபோல ஓடிற்று.

## அத்தியாயம்—5

### நடு நிசிக் காட்சி

கிழவன் வீட்டை விட்டு வெளியே சென்றவுடன் சங்கரன் அங்கு ஒரு மூலையில் உறக்கம் பிடித்து உட்கார்ந்திருந்த குமர நாதனைப் பார்த்து, "ஏடா! நாளுக்கு நாள் உனக்குப் பிடிவாதம் அதிகம் ஆகிக்கொண்டே வருகிறதே! நாங்கள் எத்தனை அடி அடித்தாலும் உனக்குப் புத்தி வரவில்லையே! 'அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்' என்னும் பழமொழியும் உன்னிடம் பொய்த்துப் போயிற்றே! நீ என்ன ஜன்மமோ தெரியவில்லையே! நீ எங்கள் தம்பி அல்லாமல் வேற்றுச் சிறுவனாய் இருந்தால், உனக்கு என்ன கதி நேர்ந்திருக்குமோ அறியேன். ஏன் உனக்கு இந்த மதி கேடு? நாங்கள் வெளியிற் போன போது எவரையும் உள்ளே விடக்கூடாது என்று உன்னிடம் சொல்லிவிட்டுப் போகவில்லையா? எங்கள் கட்டளையை மீறி நடக்க நீ கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறாய் போலிருக்கிறதே! நல்லது, உன்னைத் தகுந்தபடி தண்டிக்க எங்களுக்குத் தெரியும்," என்றான்.

குமர நாதன், யாதொன்றும் பேசாமல், தன் இரு கண்களையும் பிசைந்த வண்ணம் நின்றான்.

ஹரிஹரன்:-அண்ணா, எனக்கு அகோரமாகப் பசி எடுக்கிறது. குமர நாதன் இன்றைக்கு என்ன சமைத்து வைத்திருக்கிறான்?

சங்கரன்:—இஃதென்ன! பொரித்த மீன் துண்டம் ஒன்று தரையில் கிடக்கிறதே!

ஹரிஹரனும் சங்கரனும் தரையை நோக்கினர். குமர நாதன் நடுநடுங்கினான். 'என்னை இதற்காக என்ன செய்வார்களோ!' என்று அஞ்சினான். அவன் ஒரு நாளை ஒரு யுகமாகப் பாவித்தான்.

சங்கரன்:—குமர நாதா, அந்த மீன் துண்டம் தானாகவே நடந்து இங்கு வந்துவிட்டதோ?

ஹரிஹரன்:—நடந்து வரவில்லை. குதித்துக் குதித்து வந்தது. ஏனடா குமர நாதா! கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லாமல் இருக்கிறாயே!

சங்கரன் தன் கையை ஓங்கிக்கொண்டே குமர நாதனை அடிக்கப் போனான்.

குமர நாதன்:—அண்ணா, சிறிது நேரத்திற்கு முன் இங்கு வந்திருந்த தள்ளாதவர் தமது பசியை ஆற்றிக்கொள்ள அந்த மீன் துண்டத்தைக் கேட்டார். அதனால், எனக்கு வரும் பாகத்தில் ஒரு மீன் துண்டத்தை அவருக்குக் கொடுத்தேன். அவர் அதைத் தம்முடைய கையில் வாங்கிக் கீழே வைத்தார். அப்போதுதான் நீங்கள் நமது வீட்டுத் தெருக் கதவைத் தட்டினீர்கள். பிறகு நடந்த விஷயங்கள் யாவும் உங்களுக்குத் தெரியும். பாவம்! கீழே வைத்த

மீன் துண்டத்தை எடுத்துத் தின்பதற்குக்கூட அவருக்கு அவகாசம் இல்லாமல் போய்விட்டது.

சங்கரன்:—அந்த மீன் துண்டங்களைப் பொரித்து அடுப்பினின்றும் இறக்கி வைப்பதற்குள் உன் பாகம் எங்கள் பாகம் என்று வரையறுத்துவிட்டாயோ? நாங்கள் மனம் இசைந்து கொடுத்தால்தானே உனக்குப் பாகம் உண்டு? கொடுக்காவிட்டால், உனக்குப் பாகம் ஏது?

ஹரிஹரன்:—இனி நீ எங்கள் முன் நிற்காதே. இன்று உனக்குச் சாதம் கிடையாது.

குமர நாதன் சிறிது நேரம் மௌனமாய் இருந்தான்; அவர்கள் முன் தலை குனிந்து நின்றான்.

சங்கரன்:—இங்கு உனக்கு என்ன வேலை?

ஹரிஹரன்:—போ! போ!!

குமர நாதன் அவ்விடத்தை விட்டு அகன்றான்; அங்கு ஓர் இருட்டறையுள் நுழைந்து படுத்துத் தூங்க முயன்றான். அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. அன்று சமையல் அறையுள் நடந்த சம்பவம் அவன் மனக் கண் முன் தோன்றிற்று. "என்னுடைய அண்ணன்மார் இருவரும் அறியாத தன்மையால் அப்பெரியவரை—உடலமும் உள்ளமும் பழுத்தவரை—வீணே அவமதித்துப் பேசி, இவ்வீட்டை விட்டு அகற்றிவிட்டனரே! அவருடைய பசியும் தணிந்தபாடில்லை. வெளியிற் சென்றவர் குளிரால் எப்படி வருத்தப்படுகிறாரோ! தெரியவில்லை. 'கெடுமதி கண்-

ணுக்குத் தோன்றுது,' என்று பெரியவர்கள் சொல்வது வாஸ்தவமே,'' என்று அவன் நினைத்து மிக வருந்தி-ஞன். அவன் கண்களில் நீர் மாலை மாலையாய் வடிந்-தது. பசி ஒரு புறம் அவனை வருத்தியது. அவன் அதையும் பொருட்படுத்தவில்லை. இது நிற்க.

குமர நாதனைத் தம் எதிரில் நிற்கவொட்டாமல் அதட்டித் துரத்திவிட்டு அவ்விரு சகோதரரும்—சங்கரனும் ஹரி ஹரனும்—அவன் சமைத்து வைத்-திருந்த அறுசுவைப் பதார்த்தங்களோடு கூடிய போஜ-னத்தை விலாப் புடைக்க உண்டு, காட்டு எருமை-களைப்போல யாதொரு கவலையும் இல்லாமல் படுத்து உறங்கினர்.

வெளியில் மழை ஜோவென்று பொழிந்து-கொண்டே இருந்தது. பொற்களத்தில் அது வரை-யில் அவ்வாறு மழை பெய்ததே இல்லை. மழையுடன் புயல் காற்றும் ஆரம்பித்தது.

* * *

பகற் பொழுது முடிந்தது. சூரியனும் மேற்கில் அஸ்தமித்தான். ''யாவும் ஈசன் செயல்,'' என்று மனம் தேறிய குமர நாதன் வழக்கம் போல விளக்கு-களை ஏற்றி வைத்தான்; சமையல் செய்யத் தொடங்கி-ஞன்.

சங்கரனும் ஹரிஹரனும் சீசாக்களில் வாங்கி வைத்திருந்த விலை உயர்ந்த சாராயத்தை அபரிமித-மாகக் குடித்து வெறித்து ஆடினர். பொழுது ஏற ஏற

மழையும் காற்றும் அதிகமாயின. காற்றின் ஓசை வெகு பயங்கரமாய் இருந்தது. ஓங்கி வளர்ந்து வானத்தை அளாவிய மரங்கள் பல முறிந்து முறிந்து விழுந்தன. சில மரங்கள் இடியேறுண்டு தீய்ந்து போயின. பொற்களத்தில் அவர்களுக்குச் சொந்தமான வைக்கோற் போர்களும் நெற்கட்டுகளும் கால் நடைகளும் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப் பெற்றன.

அன்று இரவு அக்கன்னெஞ்சம் உடையோர் இருவரும் உணவு உட்கொள்ளவில்லை; குமர நாதனைக் கொஞ்சமும் கவனிக்கவில்லை. குடி வெறியால் தட்டுத்தடுமாறி அவர்கள் தங்கள் அறைகளில் நுழைந்து வெகுபிரயாசையுடன் கதவுகளைச் சாத்தித் தாழ்ப்பாள் இட்டுப் படுக்கையிற் படுத்து நித்திரை போனார்கள்.

பிறகு குமர நாதன் சிறிது நேரம் படித்துவிட்டு, உலக சிருஷ்டிக்குக் காரண கர்த்தனாய் விளங்கும் முழு முதற் கடவுளை மன மொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வணங்கி எழுந்திருந்து தன்னறையுள் நுழைந்து படுத்துத் தூங்கினான். அன்று இரவும் அவன் போஜனம் அருந்தவில்லை.

வீட்டுள் அமைதி நிலைத்திருந்தது. ஆனால், வெளியில் அடிக்கடி மின்னல் மின்னிற்று. காற்றுப் பலமாய் வீசிற்று. மழை ஓயாது பொழிந்தது. பொற்களம் எங்கும் அலங்கோலமாய்க் கிடந்தது.

* * *

நடு நிசி ஆயிற்று. சங்கரன் தன்னையே மறந்து நித்திரை செய்துகொண்டிருந்த அறையின் கதவுகள்

இரண்டும் படீரெனத் திறந்துகொண்டன. அச்-சத்தத்தைக் கேட்டதும் சங்கரன் திடுக்கிட்டு எழுந்து, "யார் அங்கே?" என்றான்.

அதற்குள் அடுத்த அறையுள் இருந்த ஹரிஹரன் தலை விரி கோலமாக அச்சத்தத்தின் காரணத்தை அறிய வெகு துரிதமாக அங்கு ஓடி வந்தான்.

அப்போது, "நான்தான்," என்னும் குரல் எழும்-பிற்று.

அக்குரலைக் கேட்டதும் சங்கரனும் ஹரிஹரனும் குடல் நடுங்கினர். ஏனென்றால், அக்குரல் அன்று பகல் அங்கு வந்திருந்த கிழவனுடையது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். 'இன்றைத் தினம் இரவு பன்னிரண்டு மணிக்கு உங்களை மறுபடியும் வந்து காண்கிறேன்,' என்று அவன் கூறிய வார்த்தைகள் அவ்விருவர் ஞாபகத்துக்கு வந்தன.

அது சமயம், இரு சகோதரர் நின்றுகொண்டு இருந்த அறையின் கூரை காற்றில் அடித்துக்கொண்டு போகப்பட்டது. பளீரென்று மின்னல் மின்னிற்று. அம்மின்னல் ஒளியில் கிழவன் கூத்தாடிய வண்ணம் நிற்பதை அவர்கள் கண்டார்கள்.

சில நிமிஷங்கள் சென்றன. அந்த அறை முழு-தும் மழை நீர் நிரம்பிற்று. அவ்வறையுள் இருந்த பெட்டிகளும் பேழைகளும் துணி மணிகளும் கட்டில் மெத்தைகளும் நீரில் மிதக்க ஆரம்பித்தன. சங்கரனும் ஹரிஹரனும் திகில் அடைந்து வெளியில் ஓடினர்; குளிரால் நடுங்கினர்.

கிழவனும் அவர்கள் பின்னே சென்று, "இந்நேரத்தில் உங்கள் நித்திரைக்குப் பங்கம் ஏற்பட்டு இருக்கிறதே என்று விசனப்படுகிறேன். உங்கள் படுக்கைகள் முழுவதும் நனைந்துவிட்டனவே! போனது போகட்டும். உங்கள் தம்பி குமர நாதன் படுத்து நித்திரை செய்யும் அறை மாத்திரம் இக்காற்றுக்கும் மழைக்கும் அசையாமல் இருக்கிறது. நீங்கள் அவ்விடத்திற்குப் போகலாம்," என்றான்.

இரு சகோதரரும் காலம் தாழ்த்தாமல் அவ்வறையை நோக்கி விரைந்து நடந்தனர். அவ்வாறு வேகமாய்ச் சென்ற இருவரையும் நோக்கி அக்கிழவன், "நண்பர்காள், அந்த அறையுள் இருக்கும் மேஜையின் மேல் நான் ஒரு நிருபம் எழுதி வைத்திருக்கிறேன். அதைப் பிரித்து வாசிப்பீராக. இனிமேல் நான் எக்காரணம் பற்றியும் இங்கு எடுத்தடி வைக்கவே மாட்டேன். இஃது உங்கள் நினைவில் இருக்கட்டும்," என்றான்.

அவ்விருவரும் கிழவன் கூறிய வார்த்தைகளைக் கேட்டனர்; அவனைத் திரும்பிப் பார்க்கவே இல்லை. அவர்கள் குமர நாதன் அறையைக் குறிக்கொண்டு சென்றார்கள்.

* * *

அவ்விரவு சங்கரனும் ஹரிஹரனும் குமர நாதன் அறையுள் நித்திரை புரிந்தனர். இச்சம்பவம் குமர நாதனுக்குத் தெரியாது.

## அத்தியாயம்—6

# பொற்கூஜாவின் பூர்விகம்

மறு நாள் பொழுது புலர்ந்தது. மழையும் நின்றது. மூவரும் நித்திரை நீங்கி எழுந்தனர்; ஜன்னலின் வழியே வெளி இடத்தை நோக்கினர். வெகு பயங்கரமான காட்சி அவர்கள் கண்களுக்குத் தோன்றிற்று. பொற்களம் முழுவதும் பொலிவு இழந்தது. மண் மேடிட்டது. அங்கிருந்த மரம் செடி கொடிகள் மாயமாய் மறைந்தன.

அக்காட்சியைக் கண்டதும் அம்மூவரும் மனம் வருந்தினர். அவர்கள் அவ்வறையை விட்டுப் பெயர்ந்து, தங்கள் வீட்டைச் சுற்றிப் பார்த்தார்கள். வீட்டின் கதவுகளும் ஜன்னற்பலகைகளும் நாநாபக்கங்களிலும் சிதறுண்டு கிடந்தன. அவர்கள் பிறர்க்குக் கொடாமல் சேமித்து வைத்திருந்த நகை நட்டுகளும், துணி மணிகளும், பொன் வெள்ளி நகைகளும், தானிய வகைகளும் மழை வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டன. சுருங்கச் சொல்லின், பொற்களம் பாழடைந்தது என்றே சொல்லலாம்.

அவர்கள் வயிறு பகீரென்று பற்றி எரிந்தது. அது சமயம், குமர நாதன் தன் அறையுள் மேஜையின் மீது இருந்த நிருபத்தை எடுத்து வந்து சங்கரனிடம் கொடுத்தான். அவன் அதைப் பிரித்து வாசித்தான். அதில்,

"இனி வருணபகவான்
இங்கு வரத்துணியான்."

என்று எழுதப் பெற்றிருந்தது. அப்போதுதான் அம்மூவரும் உரு மாறி வந்த கிழவன் யாவன் என்பதை உணர்ந்தனர். சங்கரனும் ஹரிஹரனும், "ஐயோ! கிழவன் சாமானிய மனிதன் என்று நினைத்தல்லவோ நாம் அவனைத் துன்பத்துக்கு உள்ளாக்கினோம்! அதனால் அன்றோ நமக்கு இவ்வளவு கெடுதி நேர்ந்தது!" என்று தம் கைகளைப் பிசைந்துகொண்டனர்.

குமர நாதன், "யாவும் கடவுள் செயல். கடந்த விஷயங்களை நினைத்து நினைத்து மனம் வருந்துவதேன்? இனிமேலாகிலும் நாம் சன்மார்க்கத்தில் நடந்து வருவோமாக!" என்றான்.

அவர்கள் குமர நாதன் கூறியதை அசட்டை செய்தார்கள்; அவனைப் பார்த்து, "நீ எங்களுக்கு நீதி புகட்ட வேண்டுவது இல்லை. யாவும் எங்களுக்குத் தெரியும்," என்றார்கள்.

குமர நாதன் ஒன்றும் பேசவில்லை; "யாவும் ஈசன் செயல்," என்று தன் மனத்துள் நினைத்துக்கொண்டான்.

மூவரும் அவ்வீட்டிலேயே வசித்து வந்தனர்.

* * *

கிழவனாக மாறு வேடம் பூண்டு அம்மூவர் மனத்தைச் சோதிக்க வந்த வருண பகவான் நிருபத்தில் வரைந்தபடி பொற்களத்தில் எடுத்தடி வைக்கவில்லை. அதுமுதற் கொண்டு பொற்களத்தில் மழை பொழியவில்லை.

"விசும்பிற் றுளிவீழி னல்லால்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது."

என்னும் பெரியோர் வாக்கின்படி, மழை இல்லாமற் போகவே யாவருக்கும் புகலிடம் என்று விளங்கியதும் கண்கவரும் வனப்பு வாய்ந்ததுமான பொற்களம் பாலை வனம் ஆயிற்று.

சங்கரனும் ஹரிஹரனும் குமர நாதனுடன் சில காலம் அவ்வீட்டிலேயே வசித்துவந்தனர். கால மழை இல்லாமையால் அவர்கள் உழுது பயிர் செய்வது வீண் அன்றோ! அதனால், அவர்கள் பொற்களத்தை விட்டு அதற்கு அருகில் இருந்த ஒரு பட்டணத்தை அடைந்து பிழைக்க வழி தேடினார்கள். அவர்கள் கையிலிருந்த பணம் செலவழிந்து போய்விட்டது. ஆனால், குமர நாதன் தனக்குத் தன் தாய் பிரத்தியேகமாகத் தன் பந்துவாகிய நித்தில புரத்து மந்திரியின் வசம் அநேக ஆயிர ரூபா மதிப்புள்ள பொன் வெள்ளி நாணயங்களை-யும் சாமான்களையும் ஒப்பித்துப் போன விஷயத்தை அங்கு ஒருவர் சொல்லக் கேட்டு, அப்போதே புறப்-பட்டு ஒரு காத தூரத்தில் இருந்த அந்நாட்டின் தலை நகரை அடைந்து, அந்த மந்திரியைக் கண்டு, தன் வரலாற்றை அவனுக்குத் தெரிவித்தான்.

குமர நாதன் கூறிய மொழிகளைக் கேட்ட மந்திரி அவனுக்குத் தகுந்த மரியாதை செய்து, "அப்பா, நீ ஒன்றுக்கும் அஞ்ச வேண்டா. உன் தமையன்மாரு-டைய விஷயங்களைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். நீ அவர்களை நம்பாதே. அவர்கள் சுய நலம் உடைய-

வர்கள். பேராசைப் பேயர்கள் எனத் தகுந்தவர்கள்," என்றான்.

குமர நாதன்:—ஐயா, தாங்கள் சொல்வது உண்மையே. ஆயினும், நிராதரவாய் இருக்கும் அவ்விருவரையும் பாதுகாப்பது என் கடன் அன்றோ? அவர்கள் எனக்கு இழைக்கும் துன்பத்தை நான் இன்பமாகவே கருதுகிறேன். 'யாவும் ஈசன் செயல்' என்பதை மறுக்கக் கூடியவர் எவர்? அவர்களுக்கு நான் என்னால் கூடிய உதவி செய்யத் தீர்மானித்து இருக்கிறேன். இச்சமயத்தில் அவர்களைக் கை நெகிழ விடேன்.

மந்திரி:—நீ என்னை நாடி வந்ததற்குக் காரணம் என்ன?

குமர நாதன்:—இறந்து போன என் அருமைத் தாயார் தங்களிடம் எனக்காக வைத்துவிட்டுப் போன பொன் நகைகளுள் சிலவற்றை எனக்குக் கொடுப்பீராக: அவற்றைக் கொண்டு நானும் என் அண்ணன்மாரும் பிழைக்கும் வழி தேடுவோம்.

மந்திரி:-தம்பி, உன்னிஷ்டப்படியே செய்கிறேன். ஆனால், நான் உன்னை வேண்டிக்கொள்வது ஒன்று.

குமர நாதன்:—அஃது யாது?

மந்திரி:—உன் தாயார் என்னிடம் பொன் ஆபரணங்கள் வைத்துவிட்டுப் போன விஷயத்தை நீ எக்காரணம் பற்றியும் உன் தமையன்மாருக்கு வெளியிடக் கூடாது. வெளியிட்டால், அஃது உன் உயிருக்கே ஆபத்தாக முடியும். ஜாக்கிரதை! நான் இப்போது

விறக்குறைய ஓர் ஆயிரம் ரூபா பெறுமானமுள்ள இரண்டு பொன் தட்டுகளும் ஒரு கூஜாவும் கொடுக்கிறேன். அவற்றைக் கொண்டு நீங்கள் மூவரும் விருத்தி அடையலாம்.

குமர நாதன்:—நான் உமது இஷ்டப்படியே நடக்கச் சித்தமாய் இருக்கிறேன்.

மந்திரி சிறிது ஆலோசித்தான். "ஆகா! குமர நாதன் மகா உத்தமன். பல விதங்களிலும் தனக்குத் தீங்கு இழைத்து வந்த அண்ணன்மார்களையும் அந்தரங்கத்தில் நேசிக்கிறான்; சுய நலம் உடையவர்களாய் மனம் போனவாறு குடித்து வெறித்துக் கூத்தாடி இருந்து தனத்தை எல்லாம் இழந்து உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றித் தாங்கள் செய்து வந்த பாவச் செயல்களின் பலனை அடைந்து வரும் அவ்விரு கன்மனக் கயவர் மீதும் கிஞ்சித்தும் வெறுப்படையாமல் அவர்களுக்கு உதவி செய்ய ஆவலுற்று இருக்கிறான். இச்சமயத்தில் அத்துஷ்டரை விட்டுப் பிரிந்து என்னிடம் வந்து சேர்ந்தால், இவன் யாதொரு குறைவும் இல்லாமல் சுகமாய் வாழ்ந்து வரலாம். இவ்விஷயமும் இவனுக்குத் தெரியாது இருக்கவில்லை. ஆபத்தில் அவர்களைக் கை நெகிழ விட்டுவிடுவது மகா பாவம் என்று இவன் கருதுகிறான். இரக்கம் என்பது இவன் உள்ளத்தில் ஊறி உரம் பெற்றிருக்கிறது. கடவுள் இவனுக்கு நீண்ட ஆயுளும் அஷ்ட ஐசுவரியமும் கொடுத்து ஆசீர்வதிப்பாராக! விசுவ நாதரின் குலத்தை விளக்க வந்தவன் இவன் ஒருவனே ஆவன். அவ்விருவரும் அவர் குலத்தைக்

கெடுக்க வந்த கோடரிக் காம்பை ஒத்தவர்,'' என்று தன்னுள் நினைத்து, அந்த மந்திரி குமரநாதன் விரும்பியவாறு பொன் தட்டுகளையும் கூஜாவையும் அவனிடம் கொடுத்து, "அப்பா, நீ அடிக்கடி இங்கு வந்து உங்கள் மூவருடைய க்ஷேம லாபங்களை எனக்குத் தெரிவிக்க வேண்டும். எச்சமயத்திலும் நான் உனக்கு என்னால் கூடிய உதவி புரியத் தயாராய் இருக்கிறேன்,'' என்று வெகு அன்புடன் அவனைக் கட்டித் தழுவினன்.

குமரநாதன் அவனுடைய உத்தரவு பெற்றுத் தன் தமையன்மார் தங்கி இருந்த இடத்தை நோக்கி நடந்தான்; போகிற வழியில், "இஃதென்ன அநியாயம்! என் தாயார் இந்த மந்திரியாரிடம் எனக்காக வைத்துவிட்டுப் போன பொன் ஆபரணங்கள் யாவும் எந்தைக்கு உரியவை; அவர் காலமான பிறகு அவருடைய புதல்வர்களாகிய நாங்கள் மூவரும் சரி பாகமாக அடைய வேண்டியவை. அப்படியிருக்க, என் தாயார் அவற்றை எனக்காகப் பிரத்தியேகமாய் எடுத்து வைப்பானேன்! அவர் அவ்விதம் செய்தது தவறாகும். நாங்கள் மூவரும் அடைய வேண்டிய சொத்துகளை நான் ஒருவனே அடைவது நியாயத்துக்கு விரோதம் என்பது சொல்லாமலே விளங்கும். நியாய விரோதமான காரியங்களைச் செய்து, என் தமையன்மாருக்குத் துரோகம் நினைத்து நான் சுகம் அனுபவிப்பதிலும், இல்லந்தோறும் இரந்து இரந்து உண்டு நாளடைவில் இறந்து ஒழிவது சிறந்தது அன்றோ! ஆதலால், என் தமையன்மாரிடம் உள்ளதை உள்ளவாறு எடுத்துக் கூறி, அவர்களுடைய அபிப்பிராயம்

யாதென அறிந்துகொள்ளுகிறேன்,'' என்று யோசிக்கலாயினன்.

இத்தகைய குண விசேஷங்கள் பொருந்தி விளங்கிய குமர நாதன் பரதனைக்காட்டிலும் பன்மடங்கு உயர்ந்தவன் எனத் தகுந்தவன் அல்லனோ!

அன்றைத் தினம் பொழுது சாய்வதற்குள் குமர நாதன் தானும் தன் தமையன்மாரும் வசித்து வந்த பட்டணத்தை அடைந்தான். அவனைக் கண்டதும் கன்மனக் கயவர் இருவரும் கடுங்கோபங் கொண்டு, "குமர நாத, நீ இதுகாறும் எங்கே போயிருந்தாய்? என்ன, வரவர நீ தலை விரித்து ஆடத் தலைப்பட்டுவிட்டாய்! நீ இவ்விதம் ஒடு காலியாய்த் திரிந்து வந்தால், எங்களுக்குச் சமையல் தயாரிப்பவர் யார்? உனக்கு இவ்வளவு தைரியம் எங்கிருந்து வந்தது? எங்கள் உத்தரவு இல்லாமல் நீ வீட்டை விட்டு வெளியில் கிளம்பலாமா? எங்களுக்கு இன்று பிண்டம் பெருங்காயம் ஆயிற்றே!'' என்று கூறி அவனை நையப் புடைத்தனர்.

நெடுந்தூரம் நடந்து வந்ததால் மிகுந்த சோர்வு அடைந்து இருந்த குமரநாதன் அவர்கள் அடித்த அடியைப் பொறுக்க மாட்டாமல் தொப்பென்று கீழே விழுந்து மூர்ச்சை ஆயினன். அவன் கையில் கொண்டு வந்திருந்த பொன் தட்டுகளும் கூஜாவும் அவ்விருவர் கண்ணில் பட்டன.

சங்கரன் அவற்றைத் தன் கையில் எடுத்து ஹரிஹரனுக்குக் காண்பித்து, "இவன் இவற்றை எங்-

கிருந்து கொண்டு வந்திருப்பான்! இவைகள் தனவந்தர் வீட்டில் இருப்பவை. இவைகள் இவனிடம் எவ்விதம் சிக்கின! ஒரு வேளை களவாடி இருப்பானோ!" என்று வினவினன். பிறகு இருவரும் அவற்றைப் பரி-சோதிக்கலாயினர். மூச்சுப் பேச்சு இல்லாமல் பிணம் போலக் கிடந்த குமர நாதனை அத்துஷ்டர் கவனிக்கவே இல்லை.

சிறிது நேரம் சென்றது.

சங்கரன்:—ஹரிஹர, நாம் இவைகளைக் கொண்டு கடைத்தேறலாம் என்று நினைக்கிறேன்.

ஹரிஹரன்:—எவ்விதத்தில் ?

சங்கரன் :—பொற்கொல்லரை நாம் கூலிக்கு அமர்த்திக்கொண்டு, இவற்றை உருக்கி, உருக்கிய பொன்னில் செம்பு கலந்து நாநாவித நகைகள் செய்து, அவற்றை விற்று இலாபம் அடையலாம். பொன்-னோடு செம்பு கலப்பதை எளிதில் கண்டு பிடிக்க முடி-யாது. ஜனங்கள் ஏமாந்து போவார்கள்.

ஹரிஹரன்:—இது சிறந்த யோசனைதான்.

சங்கரன்:—இனிமேல் நாம் யாதொரு கவலையும் இல்லாமல் வாழலாம்.

இருவரும் இவ்வாறு பிறரை மோசம் செய்து பிழைக்கவேண்டும் என்று பேசிக்கொண்டு இருக்கை-யில் குமர நாதன் மூர்ச்சை தெளிந்து எழுந்து உட்கார்ந்தான்.

சங்கரன் சிரித்த வண்ணம், "நல்ல தூக்கம் தூங்கி எழுந்தாய்!" என்று குமர நாதனை நோக்கிச் சொன்னன்.

ஹரிஹரன் கண் சமிக்கை செய்தான்.

குமர நாதன் ஒன்றும் பேசவில்லை. அச்சிறுவ-னுக்குப் பேசவும் சக்தியில்லை.

சங்கரன்:—அஃதிருக்கட்டும். குமர, இந்தப் பொன் தட்டுகளும் கூஜாவும் உனக்கு எங்கே கிடைத்தன ?

ஹரிஹரன்:—இவற்றை எவ்விடத்தில் இருந்து நீ திருடிக்கொண்டு வந்தாய் ?

குமர நாதன் சங்கரனைப் பார்த்து, "அண்ணு, எனக்குக் களைப்பு அதிகமாய் இருக்கிறது. குடிப்-பதற்குச் சிறிது தண்ணீர் கொடுப்பீராக. பிறகு நான் இவைகள் வந்த விதத்தைத் தெரிவிக்கிறேன்," என்று கூறிக் கண்ணீர் வடித்தான்.

ஹரிஹரன் எழுந்து போய்க் குமர நாதனுக்கு ஜலம் கொண்டு வந்து கொடுத்தான். அவன் அதை ஆவலுடன் அருந்தி, அயர்வு தீர்ந்தான்; அந்த நன்றி கொன்ற பாதகருக்கு உண்மையை ஒளிக்காமல் உரைத்தான். அவன் உள்ளத்தில் ஒரு வித மகிழ்ச்சி உண்டாயிற்று.

சங்கரனும் ஹரிஹரனும் சந்தோஷ மிகுதியால் தம்மை மறந்து கூத்தாடினர். கள்ளம் கபடு அற்ற வெள்ளை மனத்தானை குமர நாதனை வீணே துன்-புறுத்தல் அநியாயம் என்பதை அவர்கள் அறிய-வில்லை.

சங்கரனும் ஹரிஹரனும் நகை வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர்; குமர நாதனை அவ்வப்போது நித்தில

புர மந்திரியிடம் அனுப்பி, அவன் வைத்திருந்த நகைகளையும் சாமான்களையும் ஒன்றும் விடாமல் கொண்டு வரச்செய்து, அவற்றைத் தம் கைவசப்படுத்திக்கொண்டனர். குமர நாதன் கூஜாவை மட்டும் தனக்கென வைத்துக்கொண்டான்.

அவர்கள் வியாபாரம் நாளுக்கு நாள் விருத்தி அடைந்து வந்தது. அவ்விருவரும் செய்து வந்த மோசத்தை எவரும் கண்டு பிடிக்கவே இல்லை. வருஷாவருஷம் அவர்கள் அடைந்த இலாபத்தைக் கணக்கிட்டு உரைக்க முடியாது.

ஆனால், 'மனம்போல வாழ்வு' என்பது உண்மை அன்றோ! அபரிமிதமான இலாபம் கிடைக்கவே, அவர்கள் பொருள் இழந்து சில காலம் அவஸ்தைப்பட்டதையும் மறந்து, முன்போலக் கட்குடிப்பதிலும் சூதாடுவதிலும் தங்கள் காலத்தைக் கழித்து வந்தார்கள்; அவர்களிடம் வேலையில் அமர்ந்திருந்த பொற்கொல்லரை மேற்பார்வை இடுவதைத் தவிர்த்தார்கள். அதனால், அவர்கள் சமயம் நேர்ந்தபோதெல்லாம் பொன்னைக் களவாடி அளவுக்கு அதிகமாக நகைகளில் செம்பு கலந்தார்கள். ஜனங்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டது. அதுவும் அல்லாமல், அவர்களிடமிருந்து பொன்னைக் களவாடிய பொற்கொல்லர் தனித்தனியே கடைகள் வைத்துக்கொள்ளலாயினர்.

நகை வியாபாரம் படுத்துக்கொண்டது. அவர்கள் செய்து வந்த செலவு குறையவில்லை. நாலைந்து வருஷங்களுக்குள் அவர்கள் யாவற்றையும் இழந்து பராரி

ஆனார்கள். அவர்கள் குடியிருந்த வீட்டுக்குக் குடிக்கூலி கொடுப்பதற்கும் சக்தியற்று இருந்தார்கள்.

*         *         *         *

அவர்கள் மீண்டும், பொற்களத்தை அடைந்தார்கள். அங்கு அவர்களுக்குச் சொந்தமாய் இருந்த வீடு முழுவதும் - குமர நாதன் படுக்கை அறையைத் தவிர-இடிந்து தரைமட்டத்தில் இருந்தது. அம்மூவரும் அந்த அறையில் குடி புகுந்தனர்.

"...........தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை."

என்னும் பெரியோர் வாக்குக்கு இணங்க, அதுவரையில் மழையின்றி வனாந்தரமாய்க் கிடந்த பொற்களத்தில் கால மழை பெய்யத் தொடங்கிற்று. ஆனால், அம்மூவருக்கும் ஒரு வருஷத்திற்குப் போதுமான நெல் விளையக்கூடிய மழைமட்டும் பொழிந்தது.

*         *         *

இவ்விதம் மூன்று வருஷங்கள் சென்றன. கன்மனக் கயவர் இருவரும் மனம் திருந்தவில்லை. அவர்கள் எச்சிற்கையாலும் காக்கை ஓட்டுவதில்லை. பிச்சைக்காரர் ஆகிலும் விருந்தாளிகள் ஆகிலும் பொற்களத்திற்கு வருவதில்லை. அவர்கள் கையில் பணம் இல்லாததால் சூதாட்டத்தை ஒழித்தார்கள்; கள் உண்பதை நீக்கினார்கள்.

ஒரு நாள் சூரியன் அஸ்தமிக்கும் தருணத்தில் சங்கரனும் ஹரிஹரனும் வெளியே போயிருந்தனர். குமர நாதன் தன் அறையுள் ஜன்னல்

அண்டையில் தனியே உட்கார்ந்து, "இவ்வளவு கஷ்டம் நேர்ந்தும் இவ்விருவரும் இரக்கம் என்பது கிஞ்சித்தும் இல்லாமல் இருக்கின்றனரே! இது பூர்வஜன்ம வாசனை என்றுதான் நினைக்க வேண்டுவதாய் இருக்கிறது. இல்லாவிடில், இவர்கள் இதுவரையில் திருந்திய நடை உடையவர்களாய் இருப்பார்கள். 'தாம் தாம் செய்த வினை தாமே அனுபவிப்பர்,' என்பது உண்மையே. யாவும் ஈசன் செயல்!" என்று எண்ணியபடியே தன் தலையை நிமிர்த்தி, ஜன்னலின் வழியே பார்த்தான். நெடுந்தூரத்தில் குறவரும் மருளும் குன்றம் ஒன்றையும், அக்குன்றத்தினின்றும் போன் ஆறு என்னும் நதி பூமியை நோக்கி ஓடிவருவதையும், அவ்வாற்று நீர் அஸ்தமிக்கும் சூரியனுடைய அழகிய கிரணங்கள் படுவதால் உருக்கிய பொன்னைப்போலப் பிரகாசிப்பதையும் கண்ணுற்றான்; கடவுளின் திறத்தை மெச்சிப் புகழ்ந்தான்.

"இந்நதியொன்று இல்லாதிருந்தால் பொற்களம் பொலிவிழந்து மங்கல நாண் துறந்த அமங்கலியை ஒத்து விளங்கும். இதை உணர்ந்தே நம் பெரியோர், 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்,' என்று கூறி இருக்கின்றனர். செவ்வானத்தின் பிரதி பிம்பம் தோன்றுவதால் உருக்கிய பொன்னைப்போல விளங்கும் இந்நதி உண்மையில் பொன் நதியாக இருக்குமாயின், எவ்வளவு நேர்த்தியாய் இருக்கும்! பொற்களத்தைச் சூழ்ந்திருக்கும் கிராமத்தார் அனைவரும் வறுமை நீங்கிச் சுகப்படுவர். பசிப்பிணி அவர்களை வருத்தாது," என்று தன்னையே மறந்து வாய் விட்டுச் சொன்னான்.

அப்போது; "அஃது எப்படியாகும்?" என்று எவரோ சொல்வதாக அவன் காதில் பட்டது.

குமர நாதன் ஆச்சரியம் அடைந்தான்! "யார் அது?" என்றான்; சுற்று முற்றும் பார்த்தான்; அங்கு இருந்த மேஜையின் அடியில் குனிந்தும் பார்த்தான். அவன் கண்ணுக்கு எவரும் தென்படவில்லை. அவன் சிறுவனாய் இருந்ததாலும், தனியே இருந்ததாலும் அவனுக்குத் திகில் உண்டாயிற்று. அவன் மறுபடியும் ஜன்னலை அடைந்து, அந்த மலை வீழ் அருவியை உற்று நோக்கினான். இம்முறை தன் மனத்துள்ளே, 'இந்நதியின் ஜலம் பொன்னாக மாறின், எவ்வளவு இன்பகரமாக இருக்கும்!' என்று நினைத்துக்கொண்டான்.

"சிறுவனே, நீ நினைப்பது கூடாத காரியம்," என்னும் வாக்கு எழும்பிற்று.

அதைக் கேட்ட குமர நாதன், "இஃதென்ன ஆச்சரியம்! இவ்வாறு பேசுபவர் யார்? யாராயிருப்பினும் என் எதிரில் நின்று பேசட்டும்," என்றான்; மூலை முடுக்குகள் எங்கும் தேடிப் பார்த்தான். எவரும் எங்கும் காணப்படவில்லை. சிறிது நேரம் அவன் மௌனம் சாதித்தான்.

பாடல் ஒன்று கிளம்பிற்று. அஃது ஓர் இனிமையான பாடல். அதே நிமிஷத்தில் மின்னல் ஒளிபோன்ற ஜோதி தோன்றிற்று. அதைப் பார்த்த அவன் கண்கள் பூத்துப் போயின. அப்படியே அவன் தன் கண்களை மூடிக்கொண்டான். சில நிமிஷங்கள் சென்றன. அவன் மூடியிருந்த தன் கண்களைத் திறந்தான். அப்போது

84484

அவனுக்கு எதிரில் ஏறக்குறைய ஓர் அடி உயரமுள்ள குள்ளன் ஒருவன் தன்னிரு கைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு நின்றான். அவனுடைய நரைத்த தாடியும் தலை மயிரும், நீண்டு வளர்ந்து இருந்ததால், தரையில் புரண்டன. அவன் பொன்னால் செய்யப் பெற்று முத்துகள் பதித்துள்ள மேற்சட்டையும் காற்சட்டையும் அணிந்து இருந்தான். அவனுடைய தலையில் தொப்பி ஒன்று இருந்தது.

குமரநாதன் தன் எதிரில் நின்ற குள்ளனைக்கண்டதும் வியப்புற்றான்; திகில் கொண்டான். அவன் தன் உள்ள உணர்ச்சியை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் வெகு தைரியத்துடன், "ஐய, நீவிர் யாவர்? திடீரென்று இங்கு எவ்வாறு வந்தீர்? ஏன் வந்தீர்? இங்குச் சிறிது நேரத்திற்கு முன் பேசியவர் யாரென்பது உமக்குத் தெரியுமோ?" என்று கேட்டான்.

இம்மொழிகளைக் கேட்டதும் அங்கு வந்தவன் கலீர் என்று சிரித்தான்; அவன் குமரநாதனைப் பார்த்து, "சிறுவனே, நான் ஒரு சிற்றரசன்; பல வருஷங்களுக்கு முன் இந்தப் பொற்களத்தையும் இதைச் சூழ்ந்த கிராமங்களையும் ஆட்சி செய்து வந்தேன். நான் நித்திலபுர மன்னருடைய ஆளுகைக்கு உட்பட்டவன். அவருக்கு நான் வருஷாவருஷம் கப்பம் கட்டிக்கொண்டு வந்தேன்; என் கீழ் அடங்கிய பிரஜைகள் அனைவரையும் என்னுடைய பிள்ளைகளைப் போலப் பாவித்து, அவர்களுக்கு யாதொரு துன்பமும் நேராதபடி பாதுகாத்து வந்தேன். அவர்களும் என்னிடம் மிக்க விசுவாசம் உடையவர்களாய் இருந்தார்கள்.

என் குடி ஜனங்களும் நானும் அந்நியோந்ய-மாய் இருப்பதைக் கண்ட என்னைப் போன்ற சில சிற்-றரசர் என்மீது பொறாமை கொண்டனர். அவர்கள் என்னை அடியோடே தொலைக்க எண்ணினார்கள்.

"ஒரு நாள் அவரால் ஏவப்பெற்ற மந்திரவாதி ஒருவன் என்னிடம் வந்து நெடுநேரம் பேசிக்கொண்டு இருந்து, நயவஞ்சகமாய் என்னைத் தன் மந்திரக்கோலால் தடவினான். அக்கணமே நான் ஒரு பொற்கூஜாவாக மாறினேன். * * * எனக்குப் புத்திர பாக்கியம் இல்-லாமற் போகவே, எனக்குப் பின் இப்பொற்களத்தை-யும் இதைச் சூழ்ந்த கிராமங்களையும் ஆள்பவர் எவரும் இலராயினர். ஆதலால், நித்தில புர மன்னர் என் பிர-ஜைகளின் வேண்டுகோளினால் இச்சிற்றூர்களை எனக்கு நெருங்கிய பந்துவும் என் தங்கையின் புருஷரு-மாகிய விசுவ நாதருக்குக் கொடுத்து, வழக்கம்போல அவரிடம் இருந்து வருஷாவருஷம் கப்பம் வாங்கிவந்-தார். விசுவ நாதர் இடம்பம் அற்ற வாழ்க்கையில் பிரியப்பட்டவர். அவர் நித்தில புர மன்னரை நேரில் கண்டு, 'மன்னர் மன்னரே, அடியேன் சிற்றரசன் என்-னும் பட்டத்திற்கு உரியவன் அல்லன். அப்பட்டத்-தால் என்னுடைய மைத்துனனுக்கு ஆபத்து நேர்ந்தது. ஆதலால், என்னை இனிமேல் மிராசுதார் என்று அழைத்தாற் போதும்,' என்று வேண்டிக்கொண்டார். அவரும் அதற்குச் சம்மதித்தார். அது முதல் அவர் இச்சிற்றூர்களை வெகு திறமையுடன் பரி-பாலித்து வந்தார். * * * மந்திரவாதி என்னைப் பொற்கூஜாவாக மாற்றினான் என்று சொன்னேன்

அல்லவா? அந்தக் கூஜா உன் தாயாகிய என் தங்கை-யிடம் சிக்கிற்று. அந்தக் கூஜா நானே என்பதை அவள் அறிந்திலள். * * * விசுவ நாதருக்குப் பிறந்த பிள்-ளைகளுள் நீ மகா உத்தமன். எனக்கு நற்காலம் நெருங்கியதால் அந்தக்கூஜா உன்னிடம்வந்தது. அதை நீ உன் அண்ணன்மாருக்குக் கொடுக்கவில்லை. நீ அதைத் தொட்ட நாளிலிருந்து மெல்லமெல்ல என் சாபம் நீங்கிக்கொண்டே வந்தது. மந்திர வலிமையும் ஒழிந்தது. நான் இவ்வுருவம் அடைந்தேன். நீவைத்த இடத்தில் அந்தக் கூஜா இருக்கிறதா போய்ப் பார்த்து-விட்டுவா," என்றான்.

குமர நாதன் அவனுடைய சொற்படி அப்பொன் கூஜாவைப் போய்ப் பார்த்தான். அது மாயமாய் மறைந்தது. வந்தவன் கூறியவை யாவும் உண்மை என்பதை அவன் அப்போதுதான் உணர்ந்தான். குமர நாதன் திரும்பி வந்து, "நீர் கூறியபடி அக்கூஜா இருந்த இடத்தில் இல்லை," என்றான்.

வந்தவன்:—அக்கூஜாவே நான். நான் இங்கு இருக்கையில் அக்கூஜா அங்கு இருக்குமா! அது போகட்டும். சில முக்கிய விஷயங்களைப்பற்றி உன்-னிடம் பேச நான் வந்தேன். அது வருண பகவான் கட்டளையாகும். அவற்றை உனக்குச் சொல்லிவிட்டு, நான் இந்த மானிடப் பிறவி நீங்கிச் சுகம் அடைவேன்.

குமர நாதன்:-அவ்விஷயங்கள் யாவை? அவற்றை எனக்குத் தெரிவிக்க வருண பகவான் உம்மைத் துணைக் கொள்வானேன்?

வந்தவன்:—'இனி வருண பகவான் இங்கு வரத் துணியான்,' என்னும் வார்த்தைகளை நீ மறந்துவிட்டாயோ? 'பொற்களத்துக்கு எடுத்தடி வைக்கமாட்டேன்,' என்று அவர் கூறியதை மீறி நடப்பாரோ? இது நீ அறியாமற் போனதென்ன? உன்மீது அவருக்கு அத்தியந்த பிரியம் உண்டென்பது எனக்குத் தெரியும். ஆதலால், அவர் சில முக்கிய விஷயங்களை உனக்குத் தெரிவிக்க எனக்குக் கட்டளையிட்டார்.

குமர நாதன்:—ஐய, அவ்விஷயங்களை எனக்குக் கூறுவீராக.

வந்தவன்:—சிறிது நேரத்திற்குமுன் இந்த ஜன்னல் வழியே நீ பார்த்து வியந்துகொண்டு இருந்த பொன்னாற்றின் ஜலம் பொன்னாக மாறவும் அப்பொன்னால் இலாபம் அடையவும் விரும்புகிறவர் எவராயினும், அக்குன்றின் உச்சியில் ஏறி, அங்கு உற்பத்தி ஆகும் பொன்னாற்றில் மூன்று துளி புண்ணிய தீர்த்தம் தெளித்தால் அவ்வாற்று நீர் உடனே உருக்கிய பொன்னாகமாறும். புண்ணிய தீர்த்தந் தெளித்தவரைத் தவிர வேறு எவரும் அப்பொன்னை அடைய முடியாது. மேலும், புண்ணிய தீர்த்தம் அல்லாத வேறுவித ஜலத்தை அந்நதியில் தெளிப்பவர் அப்போதே அங்கு ஒரு பெரிய கருங்கற்பாறையாய்விடுவர் என்பது திண்ணம்.,'' என்று சொல்லி முடித்து அந்தர்த்தானமாயினன்.

வந்தவன் மறைந்ததைக் கண்ட குமர நாதன், இருந்த இடத்திலேயே ஒரு கற்சிலையைப்போல அசைவற்று நின்றான்.

அத்தியாயம்—7

## களவாடிய புண்ணிய தீர்த்தம்

அவன் மறைந்ததும் சங்கரனும் ஹரிஹரனும் சூதாடித் தம்மிடம் இருந்த பணத்தைத் தோற்றுவிட்டு, மிக்க விசனத்துடன் வீட்டுக்குத் திரும்பி வந்தனர்; வந்ததும், குமர நாதனை அழைத்து, "ஏடா, உன்னிடம் இருக்கும் கூஜாவைக் கொடு," என்றனர். அவன் பயத்தால் நடுநடுங்கி நின்றான்; இருந்த இடத்தை விட்டுப் பெயரவே இல்லை. அப்போது சங்கரனுக்குக் கோபம் பொங்கி வந்தது. "கூஜாவைக் கொண்டு வந்து கொடுக்க உனக்கு மனம் வரவில்லையா? அதை நீ வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறாய்? உனக்கு அஃது எங்களைக்காட்டி-லும் உயர்ந்ததோ!" என்று கூறி, அவனை நன்றாக அடித்தான்; கால் சலிக்கவும் உதைத்தான்.

ஹரிஹரன்:—என்ன சொல்லியும் அவனுக்குப் புத்தி வரவில்லை. அவன் நமது குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பாயினன். 'அடிப்பார்க்கு வெளுப்பான் ஜாதி வண்ணான். அடிமேல் அடி அடித்-தால் அம்மியும் நகரும்.' அவன்மீது இரக்கம்வையாதே. நன்றாக உதை.

குமர நாதன், சங்கரன் அடிக்கும் அடியைத் தாங்கமாட்டாமல், "அண்ணா, என்னை வீணே அடிக்க

வேண்டா. என்னால் அடி பொறுக்க முடியவில்லை,” என்று அரற்றினான்.

சங்கரன், “அப்படியானால் கூஜாவைக் கொண்டு வந்து வை,” என்றான்.

குமர நாதன் தேம்பிய வண்ணம், “அஃது என்னிடத்தில் இல்லையே! இருந்தால் அப்போதே கொண்டு வந்து வைத்திருப்பேன்,” என்றான்.

ஹரிஹரன்:—அஃது எங்கே போயிற்று?.

சங்கரன்:—அதை நீ யாருக்கு விற்றுவிட்டாய்? அல்லது, எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்?

குமர நாதன், “நான் அதை விற்கவும் இல்லை; ஒளித்துவைக்கவும் இல்லை,” என்று ஆரம்பித்து, அவ்விருவரும் வெளியில் போயிருந்தபோது நடந்த சம்பவத்தைச் சாங்கோபாங்கமாகக் கூறி முடித்தான்.

முதன் முதலில் அவர்கள் அவனை நம்பவில்லை; அடிக்குப் பயந்து அவன் பொய்சொல்லுகிறான் என்று நினைத்தார்கள்.

சங்கரன் ஹரிஹரனை ஒரு மூலைக்கு அழைத்துக்கொண்டு போய், “நமது குமர நாதன் பொய்யுரைக்கவே மாட்டான். அவன் சொன்னவற்றில் உண்மை இருக்கிறது. அவற்றை அவனிடமே தீர விசாரிக்கலாம். அப்படிப் புண்ணிய தீர்த்தம் தெளித்தாகிலும் நாம் பணக்காரர் ஆகலாம்,” என்றான்.

அதன்மேல் ஹரிஹரன் குமர நாதனைத் தன் அருகில் அழைத்து, அவன் முதுகைத் தடவிக்

கொடுத்து, அன்றைத்தினம் அங்குநடந்த சம்பவத்தை மறுபடியும் சவிஸ்தாரமாகச் சொல்லவேண்டும் என்று கேட்டான்.

குமர நாதன் சலிப்பு அடையவில்லை; அவ்விருவ-ருக்கும் நடந்தவற்றை நடந்தவாறே சொன்னான்.

* * *

அதுகாறும் சூதாட்டத்திலும் கள்ளுண்பதிலும் உலோப குணத்திலும் இரக்கம் இன்மையிலும் ஒற்று-மையாய் இருந்து வந்த சங்கரனும் ஹரிஹரனும் அப்-போது தம்முள் வேறுபாடு அடைந்தனர். அவர்க-ளைப் பணப் பேய் பிடித்துக்கொண்டது. பொன்னாற்-றில் புண்ணிய தீர்த்தம் தெளிக்க முதன்முதல் போ-வது யார் என்னும் விஷயத்தைப் பற்றி அவ்விருவ-ருக்கும் நெடுநேரம் வாக்கு வாதம் உண்டாயிற்று.

சங்கரன் ஹரிஹரனை நோக்கி, "நான் உனக்கு மூத்தவன். ஆதலால், நான்தான் முதன்முதல் பொன் ஆற்றில் புண்ணிய தீர்த்தம் தெளிக்க வேண்டும்," என்றான்.

ஹரிஹரன்:—நீ குடித்து வெறித்து உன் தேக சுகத்தைக் கெடுத்துக்கொண்டாய். அம்மலையின் உச்-சியில் ஏறிப் போக உனக்குச் சக்தி இல்லை. நான் உன்-னைக்காட்டிலும் பலவான்; வயதிலும் சிறியவன். இது காரணம்பற்றி நான் பொன்னாற்றில் முதன்-முதல் புண்ணிய தீர்த்தம் தெளித்தல் நியாயம்.

இவ்வாறு அவ்விருவரும் அண்ணன் தம்பி என்-னும் முறைமையையும் கவனியாமல் வாய்க்கு வந்தபடி பேசிக்கொண்டனர்; கடைசியில் கையும் கலந்தனர்.

சங்கரனை ஹரிஹரன் பலமாக அடித்துவிட்டான். அவன் மூச்சுப் பேச்சில்லாமல் பூமியில் சாய்ந்தான். அவன் பூமியில் சாய்ந்ததும், என்னவோ ஏதோ என்று ஹரிஹரன் பயந்து ஓடினன். அவன் போய்விட்ட பிறகு குமர நாதன் அவ்விடத்திற்கு விரைந்து வந்து, சங்கரன் பக்கத்தில் உட்கார்ந்து, கண்ணீர் வடித்த வண்ணம் அவனுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்தான். "ஐயோ! இந்த அநியாயம் எங்கு நடக்கும்? தம்பி அண்ணனை அடிப்பது உண்டா? கலி காலத்தின் கொடுமை இதுவோ! ஈசன் திருவருள் இஃதாயின், நாம் என்ன செய்வது!" என்ருன்.

சிறிது நேரம் சென்றது. சில்லென்று காற்று வீசிற்று. சங்கரன் தன் கண்களைத் திறந்து மிரள மிரளப் பார்த்தான்; மறுபடியும் தன் கண்களை மூடிக்கொண்டான். அவனுல் ஒன்றும் பேச முடியவில்லை.

சிறுவர்களே, குமர நாதனுடைய குண விசேஷங்களைக் கூர்ந்து கவனித்து, அவற்றை நீங்களும் அடைய முயற்சி செய்யுங்கள். இது நிற்க.

*　　*　　*

தமையனை நையப் புடைத்துச் சென்ற ஹரிஹரன் பொற்களத்திற்குச் சிறிது தூரத்தில் இருந்த ஒரு குக்கிராமத்தை அடைந்தான். அங்குப் பிள்ளையார் கோவில் ஒன்று உண்டு. அவன் அக்கோயிலில் பூஜை செய்யும் பிராமணனைக் கண்டு, "வேதியரே. எனக்குக் கொஞ்சம் அபிஷேக ஜலம் கொடுப்பீராக," என்ருன்.

பிராமணன், " நீ எந்த முகத்தை வைத்துக்கொண்டு என்னை அபிஷேக ஜலம் கேட்கிருய்? நா-

லந்து வருஷங்களுக்கு முன் இக்கோயில் உற்சவம் நடத்த நான் உன்னைக் கொஞ்சம் பொருள் உதவி செய்யக் கேட்ட போது, நீ என்ன சொன்னாய்? நீ என்னை அவதூறாகப் பேசி அடித்துத் துரத்தவில்லையா? என் முன் நில்லாதே. போடா போ!" என்றான்.

ஹரிஹரன் அவ்விடத்தை விட்டு அகன்றான். பிராமணன் அந்திக் கால பூஜை முடித்துக் கோயிலைப் பூட்டிக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான். அன்று நடு இராத்திரி வேளையில் ஹரிஹரன் எவரும் அறியாத வண்ணம் கோயில் பூட்டை உடைத்து, மூலஸ்தானத்துள் நுழைந்து, அங்கு ஒரு பாத்திரத்தில் வைத்திருந்த ஜலத்தைத் திருடிக்கொண்டு, வெளிக் கிளம்பினான்.

* * *

மறு நாள் ஹரிஹரன் சூரிய உதயத்துக்கு முன் எழுந்திருந்து, ஸ்நாநம் செய்து, களவாடிய அபிஷேக ஜலத்தை ஒரு சீசாவில் ஊற்றிக்கொண்டு, பொன்னாறு உற்பத்தியாகும் மலையை நோக்கி நடந்தான். ஒருமணி நேரத்திற்குள் அம்மலையின் அடிவாரத்தை அடைந்தான். அதிகாலையானதால், அப்போது சூரியன் உதிக்கவேயில்லை.

அங்கிருந்தவண்ணம் அவன் தன் கண்களை எறெடுத்து அந்த மலையின் உச்சியைக் கண்ணுற்றான். அது பனியால் மூடுண்டு ஆகாயத்தைத் தொடுவது போலத் தோன்றிற்று.

"இச்செங்குத்தான மலையின் உச்சியை அடைவது எவ்விதம்! மலையைப் பார்த்து மலேந்தால் முடியுமா! மீசைக்கும் ஆசை கூழுக்கும் ஆசையா! கஷ்டப்படாமல் காரிய சித்தி அடைவது எப்படி!" என்று கூறியபடியே ஹரிஹரன் தன் கையில் இருந்த தடியை ஊன்றி மலைமேல் ஏறத் தொடங்கினான்; சீக்கிரத்தில் மலையுச்சியை அடைய வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு, வெகு வேகமாக ஏறினான்; பாதித் தூரம் போனான். அவனுக்கு மிக்க களைப்பு வந்தது. அவன் தன்னோடு கொண்டு போயிருந்த சாதத்தை வயிறார உண்டான்; அங்கு இருந்த ஒரு மரத்தடியில் சிறிது நேரம் தங்கி இளைப்பாறினான்.

வரவர வெயில் அதிகரித்தது. மலையின் உச்சியில் இருந்த பனிக்கட்டிகள் சரிந்து, பெரும்பாறைகளைப் போலக் கீழ் நோக்கி வந்தன.

ஹரிஹரன் இளைப்பாறிவிட்டு, மறுபடியும் ஏற ஆரம்பித்தான். அவனுக்கு வழி மாளவில்லை. வழியில் கற்பாறைகள் குறுக்கிட்டன. அங்குப் பாதைகள் இல்லாமையால், அவனுக்கு மேல் நோக்கிச் செல்வது வெகு கடினமாய் இருந்தது. பனிக் கட்டிகள் இங்கும் அங்கும் அவனைத் தாக்கின.

எங்கும் சந்தடி இல்லை. அவன் பின்னே எவரோ வருவதைப்போல அவனுக்குத் தோன்றிற்று. திரும்பிப் பார்த்தான். அவன் கண்களுக்கு எவரும் தென்படவில்லை. ஆனால், எவரோ அவனைப் பின் தொடர்கிற காலடியோசை அவன் காதில் விழுந்துகொண்டே

இருந்தது. அவன் திகில் கொண்டான். அவனுக்குப் பசி அகோரமாய் எடுத்தது. உண்ண உணவு இல்லை. அவனுக்குத் தாகம் மேலிட்டது. அங்கிருந்த பனிக் கட்டிகளின் சிறு சிறு துண்டுகளை எடுத்து அவன் வாயில் அடக்கிக்கொண்டான். அப்படிச் செய்தும் அவன் தாகம் தணியவில்லை. தான் கொண்டு போன சீசாவைப் பார்த்தான். அதில் இருந்த புண்ணிய தீர்த்தத்தைக் குடிக்க அவன் மனந் துணியவில்லை.

இவ்விதக் கஷ்டத்துடன் அவன் தைரியத்தைக் கைவிடாமல், தட்டுத் தடுமாறிய வண்ணம் மேல் நோக்கிச் சென்றான். அவனுக்கு நீர் வேட்கை மிகுந்தது. அவன் தன்னிடம் இருந்த சீசாவை நோக்கினான். "ஆற்றில் தெளிக்க இச்சீசாவிலுள்ள புண்ணிய தீர்த்தத்தில் மூன்று துளிகள் போதுமானவை. ஆதலால், இந்த ஜலத்தில் ஒரு சிறிது குடித்து என் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளுகிறேன்," என்று தீர்மானித்து, அச்சீசாவைத் தன் வாய்க்கு நேரே கொண்டு போனான். அது சமயம், அவனுடைய காலண்டையில் நாயொன்று சிணுங்குவதைக் கண்டான். அது களைப்படைந்திருந்தது; அவன் முகத்தையும் அவனுடைய கையில் இருந்த சீசாவையும் பார்த்துக்கொண்டு இருந்தது. அதன் பரிதாபகரமான பார்வையை உற்று நோக்கினால், அதற்குத் தாகம் அதிகமாய் இருந்தது என்பதும், அத்தாகம் தணிய அதற்குத் தண்ணீர் தேவையாய் இருந்தது என்பதும் நன்றாய் விளங்கும். ஹரிஹரனும் அதைக்

கண்டு தெளிந்தான். ஆனால், ஈரம் இல்லாத நெஞ்சினன் ஆகிய அவன் ஜலங் கொடுத்து அந்த நாயின் தாகத்தைத் தீர்க்காமல், அதை உதைத்து அப்புறம் தள்ளி, அச்சீசாவில் இருந்த புண்ணிய தீர்த்தத்தில் கொஞ்சம் குடித்துவிட்டுத் தன் வழியே போனான்.

அவன் அவ்வாறு செய்தபோது களங்கமில்லாமல் இருந்த ஆகாயத்தில் கருமேகங்கள் சூழ்ந்தன. அவன் நின்றிருந்த இடமுழுவதும் இருண்டது.

ஒரு மணி நேரம் சென்றது. அவன் சீசாவைத் திறந்து மறுபடியும் அப்புண்ணிய தீர்த்தத்தைப் பருக ஆரம்பித்தான். அப்போது அவனுக்கு எதிரில் சிறிது தூரத்தில் ஒரு கற்பாறையின்மீது குழந்தை ஒன்று கிடந்தது. அது தன் கண்களை மூடிக்கொண்டு கை கால்களை அசையாமல் படுத்துக்கொண்டு இருந்தது. அதன் வாயும் உதடுகளும் வறட்சியுற்று இருந்தன. ஹரிஹரன் அதைக் கண்டான். அவன் மனம் சிறிதும் இளகவில்லை. அக்குழவியைப் பொருட்படுத்தாமல் கொஞ்சம் ஜலம் அருந்திவிட்டு அவன் விரைந்து சென்றான்.

ஆகாயத்தைப் பின்னும் அநேக மேகங்கள் மறைத்துக்கொண்டன. முன்னிலும் அதிகமாக இருள்பரவ ஆரம்பித்தது. ஹரிஹரன் பொருள் ஆசை மிகுதியால், கிஞ்சித்தும் சலிப்படையாமல், வெகு சிரமத்துடன் மலையின்மீது ஏறினான்; தன் தலைக்கு மேலே பொன்னூறு உற்பத்தியாகும் இடத்தைக் கண்-

ணுற்றான்; ஆனந்தம் கொண்டான். அக்காட்சியே அவனுக்குச் சிரம பரிகாரமாய் இருந்தது.

அத்தருணம், நரை திரை மிகுந்து ஒட்டி உலர்ந்த கிழவன் ஒருவன் ஹரிஹரனை நோக்கி, மெல்லிய குரலில், "ஐயா, எனக்கு நா வறண்டு போகிறது. குடிக்கக் கொஞ்சம் ஜலங்கொடுத்து என் தாகத்தைத்தணிப்பீராக. இல்லாவிடில் நான் இப்போது உயிர் துறப்பது நிச்சயம்," என்று உரைத்து, ஆங்கு இருந்த ஒரு கற்பாறையின்மீது சாய்ந்தான்.

ஹரிஹரன் அவன்மீது பரிதாபம் கொள்ளாமல், "ஏ, கிழவா, உனக்கு இன்னுமா உயிரின்மேல் இச்சை இருக்கிறது? நீ இந்த உலகத்தில் அடைந்த சுகதுக்கங்கள் போதாவோ? நீ இன்னும் உயிருடன் இருந்து அவஸ்தைப்படுவதிலும் இறந்து ஒழிவது நலம்," என்று சொல்லிக்கொண்டே போனான்; அவனுடைய தாகத்தைத் தீர்க்கவில்லை.

திடீரென்று ஆகாயத்தில் மேகங்களைக் கிழித்துக்கொண்டு மின்னல் ஒன்று தோன்றி மறைந்தது.

ஹரிஹரன் பொன்னாற்றின் உற்பத்தி ஸ்தானத்தை அடைந்தான். சூரியன் அஸ்தமிக்கும் சமயம் நெருங்கியது. அவ்வாற்றின் ஜலம் பொன்னைப் போலப்பிரகாசித்தது. அதைப்பார்க்கப் பார்க்க அவன் தலை சுழன்றது. அவனுடைய மனத்தில் திகில் புகுந்தது. அக்கணமே அவன் தன் கையில் இருந்த சீசாவை எடுத்து அந்நதியில் வீசி எறிந்தான். * * * கண் இமைக்குமுன் அவன் அவ்வாற்றில்

தலைகீழாக விழுந்து, ஒரு பெரிய கருங்கற்பாறையாக மாறினன். அக்கருங்கற்பாறையின்மீது பொன்னுற்றின் ஜலம் புரண்டு புரண்டு ஓடிற்று.

அத்தியாயம்—8

## கன்னெஞ்சமுடையவன் கதி

இரண்டு வாரங்கள் சென்றன. அடியுண்ட சங்கரன் தேக சௌக்கியம் அடைந்து, எழுந்து உலாவத் தலைப்பட்டான். குமர நாதனும் குதுகலம் அடைந்தான். ஆனால், சங்கரனை அடித்துவிட்டுச் சென்ற ஹரிஹரன் இத்தனை நாள் ஆகியும் திரும்பி வராதது கண்டு, "அவனுக்கு என்ன நேர்ந்ததோ!" என்று நினைத்து நினைத்து, அவன் மனம் நொந்து அழுதான். 'உதிரப் பாசம் ஒடிப் பாயும்,' என்பது அவனிடம் உண்மை ஆயிற்று.

சங்கரனோவெனில், சந்தோஷம் அடைந்தான். "ஹரிஹரன் என்னை மோசம் செய்ததால், கட்டாயமாகக் கருங்கற்பாறையாக மாறி இருப்பான். இனி என்னைத் தடுப்பவர் எவரும் இலர். நான் புண்ணிய தீர்த்தம் கொண்டு பொன்னாற்றின் ஜலத்தைப் பொன் ஆக்கி, அதைக்கொண்டு தனவந்தன் ஆவேன்," என்று தீர்மானித்துக்கொண்டான்.

அன்றைத் தினம் பிற்பகல் குமர நாதன் சங்கரனை அணுகி, "அண்ணா, சிறிய அண்ணன் எங்கே போனாரோ! அவரைத் தேடி அவர் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். அவர் ஒருவர் இங்கு இல்லாதது ஆயிரம் ஆட்கள் இல்லாததுபோல இருக்கிறது," என்றான்; தேம்பித் தேம்பி அழுதான்.

சங்கரன், ஹரிஹரன் காணுமற் போனதற்கு வருந்துபவன்போலப் பாசாங்கு செய்து, குமர நாத-னைத் தேற்றினுன்; "நீ எதற்கும் அஞ்ச வேண்டா. நான் போய் ஹரிஹரனைத் தேடிக் கண்டு பிடித்து, இங்கு அழைத்து வருகிறேன்," என்றான்.

அன்றிரவு சங்கரன் குமர நாதனிடம் தன் உள்-ளக் கருத்தை வெளியிடாமல், ஹரிஹரனைத் தேடிப் போவதாக மட்டும் தெரிவித்து வெளிச் சென்றான்.

சங்கரனும் ஹரிஹரனைப்போல அதே பிள்ளை-யார் கோயில் பிராமணனைக் கண்டு, அவனுக்குப் பொருள் கொடுத்து, அபிஷேக ஜலத்தை வாங்கிக்-கொண்டு மலையை நோக்கி நடந்தான்; அபிஷேக ஜலத்-துடன் சோற்று மூட்டை ஒன்றும் எடுத்துக்கொண்டு சென்றான்.

அவன் மலையடிவாரத்தை அடைந்தான். சூரிய-னும் உதித்தான். அவன் சிறிது நேரமும் தாமதிக்-காமல், மலை மீது ஏறினுன். கொஞ்ச தூரம் சென்ற-தும் அவனுக்கு இளைப்பும் களைப்பும் மேலிட்டன. அவன் அங்கு ஓர் இடத்தில் உட்கார்ந்து, தான் கொண்டு போயிருந்த சோற்றுமூட்டையை அவிழ்த்து, பசி தீர உண்டான்; அபிஷேக நீரில் ஒரு சிறிது அருந்தினுன். அப்பொழுது சிறு குழந்தை ஒன்று அவன் அருகில் வந்து, மழலை மொழியில் குடிக்க ஜலம் கேட்டது. சங்கரன், "உனக்குத் தண்ணீரா வேண்டும்! எனக்கே போதுமான ஜலம் இல்லையே!

'தனக்கு மிஞ்சினது தர்மம்.' போ போ," என்று அக்குழந்தையை அதட்டித் துரத்தினன்.

சங்கரன் தன் வழியை நோக்கி நடந்தான். ஒரு மணி நேரம் சென்றது. சூரியன் அக்கினி மயமான கிரணங்களைக்கொண்டு பச்சாத்தாபம் இல்லாமல் அவனைத் தாக்கினன். அவன் உடல் முழுவதும் வியர்வையால் நனைந்தது; நா வறண்டது. அவன் ஜலம் ஊற்றி வைத்திருந்த சீசாவைத் திறந்தான். அது சமயம் ஹரிஹரனுக்குத் தென்பட்ட வயோதிகன் சங்கரன் எதிரிலும் வந்து, "தர்ம துரையே, நான் பசியால் மெலிந்து வருந்துகிறேன். என் கண்கள் பஞ்சடைந்திருக்கின்றன. காதடைக்கிறது," என்றான்.

சங்கரன்:—என்னிடம் ஒன்றும் இல்லையே!

கிழவன்:—இச்சீசாவில் இருக்கும் ஜலமாவது எனக்குக் கொஞ்சம் கொடுத்து உதவுவீர் என்று நினைக்கிறேன்.

சங்கரன்:—இந்த ஜலத்தை உனக்குக் கொடுத்துவிட்டு நான் என்ன செய்வது? போ போ. இங்கு நில்லாதே.

கிழவன் ஒன்றும் பேசாமல் போய்விட்டான்.

சங்கரன் ஜலத்தில் பாதியளவு அருந்தி, மேல் நோக்கி நடந்தான்; பொழுது சாயும் சமயத்தில் மலை உச்சியை அடைந்தான். அங்கு அவனுடைய சகோதரன் ஹரிஹரனைப் போன்ற உருவம் அவன் கண் முன் தோன்றி, "அண்ணா, எனக்குக் குடிக்க ஜலம் கொஞ்சம் கொடும்," என்றது.

சங்கரன் அவ்வுருவத்தைத் தன் தம்பி என்றே கருதி, "ஹரிஹர, நல்ல யோக்கியன் நீ! என்னை நையப் புடைத்துப் பொற்களத்தில் குற்றுயிராய் விட்டு வந்த உனக்கா நான் ஜலம் கொடுப்பேன்! ஆஹா!" என்று கூறி நகைத்தான். பிறகு அவன் சிறிது தூரம் சென்றான்; திரும்பிப் பார்த்தான். ஹரிஹரன் உருவம் அவ்விடத்தினின்றும் மறைந்தது. அவன் உள்ளம் நடுங்கினான்; முன்னோக்கி நடந்தான். நதியின் உற்பத்தி ஸ்தானத்தை அடைந்து, ஒரு கற்பாறையின் மீது நின்ற வண்ணம் அந்நதியில் தான் கொண்டு போயிருந்த தீர்த்தத்தைத் தெளித்தான். அக்கணமே பின் புறத்திலிருந்து பனிக்கட்டி ஒன்று அவன் மீது தாக்கியது. அவன் கால் இடறி அந்த நதியில் விழுந்து ஒரு பெருங்கற்பாறை ஆயினன்.

பொன்னாறு அந்த இரண்டு பெரிய கற்பாறையின் மீது பேரிரைச்சலுடன் தாவித்தாவி ஓடிக்கொண்டிருந்தது.

அத்தியாயம்—9

## வறுமை ஒழிந்தது.

பல மாதங்கள் பறந்தன. பொன்னுற்றை நாடிச் சென்ற சங்கரனும் ஹரிஹரனும் பொற்களத்-துக்குத் திரும்பவே இல்லை. "என் அருமை அண்-ணன்மாரை நான் எப்போது காண்பேன்! மலைக் குகைகளில் வசிக்கும் புலி முதலிய மிருகங்கள் அவர்-களைக் கொன்று தின்றனவோ! அல்லது, அவர்கள் கருங்கற்பாறைகள் ஆனார்களோ! நான் திக்கற்றவனாய் விட்டேனே! தனியே என் காலத்தை நான் எப்படிக் கழிப்பது! ஈசா, இதுவும் உன் திருவருள் செயலோ!" என்று குமர நாதன் ஏங்கினன். அவனுக்குத் தேறு-தல் கூறுவார் எவரும் இலராயினர்.

அவன் கடைசியில், "நான் அவ்விருவரையும் இழந்து தனியே உயிர் வாழ்வதில் யாது பயன்? நானும் அவர்களைப்போலப் பொன்னுற்றை நாடிச் சென்று, புலிகள் வாயில் சிக்கி மாள்வேன்," என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, அவ்விருவரைப் போலவே பிள்ளையார் கோயில் பிராமணன் இடஞ் சென்றான். அப்பிராமணன் குமர நாதனைக் கண்ட-தும் வெகு மரியாதையுடன் எதிர் கொண்டழைத்து, "பொற்களத்துப் பெருமானே, தாங்கள் வயதிற் சிறியவராயினும், எங்களைப் போன்ற ஏழைகளுக்குப் பற்றுக்கோடாய் இருந்து வருவதால் நாங்கள் உம்மைக்

கௌரவப்படுத்தும் கடமை உடையவர்களாய் இருக்கிறோம். இவ்வளவு தூரம் தாங்கள் ஏழையேனை நாடி வந்ததேன்?" என்று வினவி, அவனை ஓர் ஆசனத்தில் அமர்த்தினன்.

குமர நாதன்:—பிராமணோத்தமரே, எனக்குத் தாங்கள் தயை செய்து அபிஷேக ஜலம் கொஞ்சம் கொடுப்பீராயின், அதைக் கொண்டு நான் நற்கதி அடையலாம் என்று நம்புகிறேன்.

பிராமணன், "உமக்கில்லாத அபிஷேக ஜலமா! சில வருஷங்களுக்கு முன், தாங்கள் மானியமாக விட்ட நிலத்தின் வருஷ வரும்படியைக் கொண்டன்றோ நான் விநாயக மூர்த்திக்குப் பூஜை நைவேத்தியம் முதலியவற்றைச் சரிவர நடத்தி வருகிறேன்!" என்று கூறி, எழுந்திருந்து, மடைப்பள்ளிக்குச் சென்று, புளியோரை ததியோதனம் வெண்பொங்கல் முதலியனவும் அபிஷேக ஜலமும் கொணர்ந்து அவன் முன் வைத்து, "விநாயக மூர்த்தி உமக்கு நீண்ட ஆயுளும் காரிய சித்தியும் அனுக்கிரகிப்பாராக!" என்று ஆசீர்வதித்தான்.

குமர நாதன் வெகு விநயத்துடன் அவற்றைக் கைக்கொண்டு, எங்கும் தங்காமல் மெல்ல மெல்ல நடந்து மலையடிவாரத்தை அடைந்தான்; விநாயக மூர்த்தியைத் தன் மனத்துள் சிந்தித்தான்; "யாவும் கடவுள் செயல்!" என்று கூறி மலைமீதேறினன். அவன் சிறுவன் ஆனதால், இரண்டு மூன்று முறை கால் இடறிக் கீழே விழுந்தான்; எழுந்தான்.

பகல் பன்னிரண்டு மணி ஆயிற்று. அவன் பாதி தூரம் சென்றான். அங்கு ஓர் ஆலமரத்தடியில் உட்கார்ந்து கையில் கொண்டு போயிருந்த புளியோரை மூட்டையை அவிழ்த்து, உண்ண ஆரம்பித்தான்.

அப்போது, முன்பு சங்கரன் ஹரிஹரன் இவர்கள் எதிரில் தோன்றிய கிழவன் தன் கையில் தடி ஊன்றிய வண்ணம் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து குமர நாதன் உட்கார்ந்திருந்த இடத்திற்குச் சிறிது தூரத்தில் நின்று, "மகனே, நான் அன்னம் புசித்து ஆறு நாட்களாகின்றன. பசி என்னை வருத்துகிறது. என் கை கால்கள் சோர்வடைந்திருக்கின்றன," என்று கெஞ்சி நின்றான்.

குமர நாதன் அவனைக்கண்டு அவன்மீது இரக்கங் கொண்டு, "பெரியவரே, இதோ இந்தச் சோற்று மூட்டையை அப்படியே எடுத்துக்கொள்வீராக," என்று கூறி, உட்கார்ந்திருந்த இடத்தை விட்டெழுந்து அம்மூட்டையைத் தூக்கிக் கிழவனிடம் கொடுத்தான். கிழவன் அதை வெகு ஆவலுடன் வாங்கி, அந்த மூட்டையில் இருந்த புளியோரை முதலியவற்றை வயிறாரப் புசித்தான்; பிறகு அச்சிறுவனைக் குடிப்பதற்கு ஜலம் கேட்டான். குமர நாதன் முன் பின் யோசியாமல், அபிஷேக ஜலம் ஊற்றி வைத்திருந்த சீசாவை அவனிடங் கொடுத்து, "ஐயா, இதில் எனக்குக் கொஞ்சம் வைத்துவிட்டு மிகுதியைத் தாங்கள் அருந்தலாம்," என்றான்.

கிழவன் சீசாவில் இருந்த ஜலத்தில் முக்கால் பாகத்தை அருந்தி, "என் பசியைத் தீர்த்த உனக்குக்

கடவுள் அருள் புரிவார். நீ நாடிச்செல்லும் காரியமும் ஜயமாகும்,'' என்று அச்சிறுவனை வாழ்த்திவிட்டுப் போனான்.

குமரநாதன் கிழவன் பசி தீர்ந்ததைக் கண்டு ஆனந்தங் கொண்டான். அவனுக்கு இருந்த அகோரப் பசி அடங்கிவிட்டது. அவன் சீசாவில் இருந்த கால் பாக ஜலத்தில் கொஞ்சம் அருந்தி, மேல் நோக்கி நடந்தான்; ஒரு மணி நேரம் வரையில் நடந்து சென்றான். மலைமேல் இருந்த பாதை நடப்பதற்குச் சுலபமாய் இருந்தது. காற்று ஜில்லென்று வீசியது. பறவைகள் பாடின.

குமரநாதனுக்கு மறுபடியும் தாகம் எடுத்தது. அவன் சீசாவில் இருந்த ஜலத்தைப் பருக அச்சீசாவைத் தன் வாய்க்கு அருகே கொண்டு போனான். ஜலம் அருந்தவே இல்லை.

அது சமயம், அவன் நடந்து சென்ற பாதையின் ஓரத்தில் குழந்தை ஒன்றைப் படுக்க வைத்திருப்பதைக் கண்டு ஓடோடியும் சென்று அதை வெகு பரிவுடன் தன் கையில் ஏந்தி, "குழந்தாய், உன்னைப் பெற்றெடுத்த உன் தாயார் உன்னை இங்குக் கிடத்தி வைப்பானேன்? வெயிலின் உஷ்ணம் உன்னால் தாள முடியுமோ? உனக்குக் கொடுக்கக்கூடிய வஸ்து ஒன்றும் என் கையில் இல்லையே! நான் என்ன செய்வது!'' என்றான்; அக்குழந்தைக்காகப் பெரிதும் வருந்தினான்; அவன் தன் கையில் இருந்த சீசாவைத் திறந்து அக்குழந்தை வாயில் சிறிது ஜலம் வார்த்தான்.

ஜலம் குடித்ததுதான் தாமதம். அக்குழந்தை துள்ளிக் குதித்து அவன் கையினின்றும் விடுபட்டுப் புன்னகை செய்துகொண்டே குறுநடை நடந்து சென்றது. குமர நாதன் மனமகிழ்ந்து மலையுச்சியை நோக்கி நடந்தான். வழியெல்லாம் புஷ்பங்கள் மலர்ந்து நறுமணம் வீசின. குளிர்ந்த காற்று வீசிற்று. அவன் நடந்து சென்ற பாதை அவனுடைய பாதங்களுக்குப் பஞ்செனு மிருதுவாய் இருந்தது.

குமர நாதன் மலையின் உச்சியைக் குறுகினான். அவனுக்கு நீர் வேட்கை அதிகமாயிற்று. சீசாவில் அபிஷேக ஜலம் ஐந்தாறு துளிகள் இருந்தன. "இந்-நீரைக் குடித்துவிட்டால், பொன்னாற்றில் தெளிப்-பதற்குப் புண்ணிய தீர்த்தம் இல்லாமற்போகும். நாம் நாடிவந்த காரியமும் சித்திபெறாது ஒழியுமே!" என்று நினைத்து, அவன் தனக்கு இருந்த தாகத்தை அடக்கிக்-கொண்டான்; தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தான். பொன்னாறு உதிக்கும் இடத்தைக் கண்டான். அது வெகு சமீபத்தில் இருந்தது.

அவன் நின்றிருந்த இடத்தில் சொறிபிடித்த ஒரு நாய் நடக்கமாட்டாமல் சிணுங்கிக்கொண்டிருந்த சத்-தம் அவனுடைய காதில் விழுந்தது.

குமர நாதன் அந்நாயைக் கண்ணுற்றான். அவன் மனம் இளகிற்று. "ஐயோ! இந்த நாயை நான் காப்-பாற்றுவது எவ்விதம்! இப்போது நான் இதற்கு ஒன்-றும் கொடுக்காவிட்டால், பொன்னாற்றில் புண்ணிய தீர்த்தத்தைத் தெளித்துவிட்டு நான் திரும்புகையில்

இஃது இறந்துகிடக்கும் என்பதற்குச் சந்தேகமே இல்லை. இந்த நாயை இறந்து போகாமல் தடுப்பது சிறந்ததா? நான் இதை இறக்கவிட்டுத் தனவந்தனாக வாழ்வது சிறந்ததா? ஜீவகாருண்யம் பொருந்தி வறிஞனாய் வாழ்வது சிறந்தது. ஆதலால், இந்த நாய்க்குச் சீசாவிலுள்ள புண்ணிய தீர்த்தத்தைக் கொடுப்பேன்; பொன்னாற்றின் ஜலத்தைப் பொன்னாகமாற்றி எனக்கு அதை உரிமையாக்கிக்கொள்வதில் விருப்பம் கொள்ளமாட்டேன்,” என்று நிர்ணயஞ் செய்துகொண்டான்; சீசாவைத் திறந்தான்; அதில் உள்ள ஜலத்தை நாய்க்குக் கொடுத்தான். அந்நிமிஷமே நாய், இரண்டு மாதங்களுக்கு முன் குமர நாதன் முன் தோன்றிய குள்ளக் கிழவனாக மாறிற்று.

குமர நாதன் ஆச்சரியமும் திகிலும் ஒருங்கே அடைந்தான்.

* * *

குள்ளக் கிழவன் :—குமர நாத, நீ எதற்கும் அஞ்ச வேண்டா. நீ ஏன் அவ்விரு கன்மனக் கயவரை இங்கு அனுப்பினாய்? அவர்களை இரண்டு பெரிய கருங்கற்பாறைகளாகச் சபித்துவிட்டேன்.

குமர நாதன், கண்களில் நீர் ததும்ப அக்குள்ளக் கிழவனை நோக்கி, “ஐய, தங்களுக்கும் ஈரம் இல்லாத நெஞ்சிருப்பதேன்?” என்றான்.

குள்ளக் கிழவன்:—எனக்கோ ஈரம் இல்லாத நெஞ்சம்! எனக்கு உரித்தான பொன்னாற்றில் அப்படுபாவிகள் அசுத்த ஜலத்தைத் தெளித்தார்களே! அவர்களை நான் தண்டிக்காமல் விடுவேனா!

குமர நாதன்:—அவர்கள் கொண்டு வந்தது அபி-ஷேக ஜலந்தானே!

குள்ளக் கிழவன், "அவர்கள் கொண்டு வந்தது அபிஷேக ஜலமாய் இருக்கலாம். ஆனால், அந்த ஜலத்-தில் கொஞ்சமாயினும் பசித்தோர்க்கும் இறக்கும் தறு-வாயில் இருப்போர்க்கும் கொடாவிடில், அது அசுத்த ஜலமாகும் அன்றோ!" என்று கூறி, கீழே குனிந்து, தன் காலடியில் மலர்ந்திருந்த மலர் ஒன்றைக் கொய்து, அதன் இதழ்களில் இருந்த பனி நீரைக் குமர நாத-னுக்குக் காண்பித்து, "நீ இந்நீரைப் பொன்னாற்றில் தெளித்துவிட்டு மற்றொரு பக்கமாக இந்த மலையினின்-றும் கீழே இறங்கிவிடு. கடவுள் உனக்கு அருள் புரி-வாராக!" என்று சொல்லி மாயமாய் மறைந்தான்.

* * *

"கருங்கற்பாறைகளாக மாறிய என் அண்ணன்-மாரை உயிர்ப்பிக்கும் மார்க்கம் ஒன்றும் இல்லையே! அவ்வயோதிகரை நான் மறுபடியும் காண்பது எப்படி? அவரைக் காணில், நான் அவர் பாதங்களில் விழுந்து அவ்விருவருடைய சாப விமோசனத்திற்கு வழி தேடு-வேன்," என்று நினைத்த வண்ணம் குமர நாதன் சில நிமிஷங்கள் வரையில் அவ்விடத்திலேயே நின்று-கொண்டிருந்தான்; நெடுமூச்செறிந்தான்.

* * *

பிறகு குள்ளக்கிழவன் கட்டளைப்படி குமரநாதன் பொன்னாறு உற்பத்தியாகும் இடத்தை அடைந்து, அங்கு மலரில் இருந்த பனி நீரைத் தெளித்தான்; சிறிது நேரம் அவ்விடத்திலேயே நின்றுகொண்டு இருந்-

தான். அவ்வாற்றில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. அவ்வாற்று நீர் பொன்னாக மாறவில்லை. சிறிது நேரத்திற்கு முன்னிருந்த ஜலமும் குறைந்துகொண்டே வந்தது.

அதன் பிறகு குமர நாதன் மற்றொரு வழியாகக் கீழே இறங்கினான். அவன் இறங்கிப் போகிற வழியில் பூமிக்குள்ளே சலசலவென்று ஜலம் பாய்ந்து செல்லும் சத்தம் அவனுடைய காதில் விழுந்தது.

அரை மணி நேரத்திற்குள் குமர நாதன் பொற்களத்தை அடைந்தான். அங்கு அவன் என்றைக்கும் பார்த்திராத நதியொன்று ஐந்து கிளைகளாகப் பிரிந்து பொற்களம் முழுவதும் பாய்ந்து சென்றது. அதன் ஜலம் குமர நாதனுக்குத் தங்கத்தின் பலனைக்கொடுத்து வந்தது.

* * *

கொடிய குணத்தால் பாலை நிலமாக மாறிப் பாழ் அடைந்திருந்த பொற்களம், இரக்கம் என்னும் இனிய குணத்தால் இந்திரலோகத்தை நிகர்த்து விளங்கிற்று. அங்குப் பலவித மரஞ் செடி கொடிகளும், கண் கவரும் வனப்பு வாய்ந்த மலர்களும் மிளிர்ந்தன. குயில்கள் முதலிய பறவைகள் பாடின. எப்போதும் பொற்களம் இன்ப மயமாய் இருந்து வந்தது.

குமரநாதனை நாடிவந்த ஏழைகளும் பிணியாளரும் பிரியமுடன் பரிபாலிக்கப் பெற்றனர். நாள் ஏற ஏற அவன் நித்தில புரத்து மன்னனைக்காட்டிலும் பன்மடங்கு தனவந்தன் ஆயினன். அந்த மன்னன் தன்

மந்திரி மூலமாய்க் குமர நாதன் குண விசேஷங்களை அறிந்து, அவனுக்குத் தன் ஒரே புதல்வியை மணம்புரிவித்தான்.

* * *

குமர நாதன் பொன்னாற்றுப் புரவலன் எனப்பெயர்பெற்று, நெடுங்காலம் பொற்களத்தை அரசாண்டு வந்தான்.

84484

TB
O-3(6)
N34

பொன்னுற்றுப் புரவலன்போற்
புகழடைய விரும்பிடுவோன்
தன்னுலாம் நன்மைகளைத்
தவிக்குமுயிர் தமக்களிப்பின்
பொன்னுட்டுப் புலவர்களும்
போற்றுறுநற் குணமடைந்து
மன்னுகி மண்புரந்து
மலரவனு டடைகுவனுல்.

Printed at the Liberty Press, G. T. Madras.

RGR / 794